

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 86 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 18 – சனிக்கிழமை 04 நவம்பர் 2023 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 86: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 18 - Saturday 04 November 2023 - Trichy ★★ 16 Pages ₹5.00


# “களம் காணட்டும் கழகப் படை!”



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

திராவிட முன்னேற்றக் கழகம் ஆறாவது முறையாக ஆட்சி செய்கின்ற வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றுகிற வகையில் நாள்தோறும் சாதனைத் திட்டங்களை சிறப்பாக நிறைவேற்றி வருகிறது நமது திராவிட மாடல் அரசு. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களும் பின்பற்றக்கூடிய வகையில் நம்முடைய அரசின் திட்டங்கள் மக்களுக்குப் பயனளித்து வருகின்றன.

அதேநேரத்தில், மாநிலங்களின் வளர்ச்சியை விரும்பாத - மாநிலங்களின் உரிமைகளை மதிக்காத - மாநிலங்களுக்குப் போதிய நிதியளிக்காத - மாநிலங்கள் என்ற கட்டமைப்பே இருக்கக்கூடாது என்ற கொள்கையைக் கொண்டவர்களின் ஆட்சி இந்திய ஒன்றியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது குறித்து ‘Speaking for India’ என்ற நிகழ்வின் மூன்றாவது பகுதியில் பேசியிருக்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மாநில சுயாட்சிக் கொள்கையையும் அதன் இன்றைய தேவையையும் அந்த உரையில் குறிப்பிட்டிருக்கிறேன். தமிழிலும் இந்திய மொழிகள் பலவற்றிலும் வெளியாகியுள்ள அந்த உரையை உடன்பிறப்புகளாகிய நீங்கள் கேட்டிருப்பீர்கள் என நம்புகிறேன். அதனை எல்லாரிடமும் எடுத்துச் செல்ல வேண்டிய பணியையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

**இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் எதிரான மதவாதக் கொள்கை கொண்ட ஆட்சியை அகற்றிட இந்தியா கூட்டணி உருவாகி, நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. அதில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்கு மகத்தானது. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் முழுமையான வெற்றியை இந்தியா கூட்டணி பெற்றிட, தமிழ்நாடு, புதுவை உள்ளடக்கிய 40 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற்றாக வேண்டும். அதற்கான கட்டமைப்பை இந்தியா கூட்டணி உருவாவதற்கு முன்பே நாம் தொடங்கிவிட்டோம்.**

கடந்த மார்ச் 22-ஆம் நாள் நடந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 100 வாக்காளர்களுக்கு ஒருவர் என பூத் கமிட்டி அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு பூத் கமிட்டியிலும் மகளிர், இளைஞர், சமூக வலைதளச் செயற்பாட்டாளர்கள் இருக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி தமிழ்நாடு முழுவதுமுள்ள வாக்குச்சாவடிகளுக்கு பூத் கமிட்டிகள் அமைக்கப்பட்டு, அதில் பங்கேற்றுள்ள உறுப்பினர்களின் விவரங்கள் சரியாக இருக்கிறதா என்பதும் உறுதி செய்யப்பட்டது.

அதே மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில், தி.மு.கழகத்தில் ஏற்கனவே உள்ள ஒரு கோடி உறுப்பினர்களுடன் புதிதாக ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்கிற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு, ஒரு தொகுதிக்கு எத்தனை உறுப்பினர்கள் என்ற விவரமும் மாவட்ட நிர்வாகத்திடம் வழங்கப்பட்டு, அதன்படி புதிய உறுப்பினர்கள் சேர்ப்பு நிறைவடைந்துள்ளது. புதிய உறுப்பினர்களின் வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட ஆதாரங்களும் சரிபார்க்கப்பட்டுள்ளன. நவம்பர் 7-ஆம் நாள் முதல், கழகத்தின் புதிய உறுப்பினர்களுக்கான அட்டைகள் வழங்கப்படவிருக்கின்றன.

அதுபோலவே, பூத் கமிட்டிக்குரிய பாக முகவர்களின் (BLA2) கூட்டம் மண்டல வாரியாக நடைபெற்று வருகிறது. 26-07-2023 அன்று திருச்சியில் டெல்டா மண்டல பாக முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டமும், 17-08-2023 அன்று இராமநாதபுரத்தில் தென்மண்டல பாக முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டமும், 24-09-2023 அன்று காங்கேயத்தில் மேற்கு மண்டல பாக முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டமும், 22-10-2023 அன்று திருவண்ணாமலையில் வடக்கு மண்டல பாக முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டமும் சிறப்பான முறையில் நடந்தேறிய நிலையில், நவம்பர் 5 அன்று சென்னை மண்டலத்திற்கான பாக முகவர்களுக்குரிய பயிற்சிக் கூட்டம் திருவள்ளூரில் நடைபெறவிருக்கிறது.

> **தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய கடமையையும் திராவிட முன்னேற்றக் கழகம் தன் தோளில் சுமந்துள்ளது. அதற்குப் பாக முகவர்களும், பூத் கமிட்டியினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். தொகுதிப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டிருப்போரும் வாரம் ஒரு முறையேனும் தொகுதிக்குச் சென்று பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைவரின் பணிகளையும் மூத்த தொண்டன் என்ற முறையில் கழகத்தின் தலைவனான நான் கண்காணித்து, ஒவ்வொரு தொகுதியின் நிலவரத்தையும் பெற்றுக் கொண்டுதான் இருப்பேன்.**

மாநாடுகள் போல நடைபெற்ற ஒவ்வொரு கூட்டத்திலும், பாக முகவர்களும் பூத் கமிட்டி உறுப்பினர்களும் எத்தகைய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்களில் எப்படிச் செயல்படவேண்டும் என்பதையும், கழகத்தின் சார்பிலான செயலிகளைப் பயன்படுத்தும் முறையையும் தெளிவாக விளக்கி, ஒவ்வொரு வாக்கையும் சிந்தாமல் சிதறாமல் கழக அணிக்குக் கொண்டு வருவதற்குரிய வகையில் பயிற்சிகள் அமைந்தன. வெறும் கூடிக் கலையும் கூட்டமாக இல்லாமல், கொள்கைத் தெளிவுடனும் அந்தக் கொள்கைகளைக் கொண்டு சேர்க்கத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சியுடனும் இந்தக் கூட்டங்கள் மிகச் சிறந்த பயிலரங்குகளாக நடைபெற்றிருக்கின்றன.

பூத் கமிட்டிகளை அமைப்பதற்காகவும், புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை மேற்கொள்வதற்காவும் தமிழ்நாட்டின் 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் கழகத்தின் சார்பில் தொகுதிப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் பணியை நிறைவேற்றியுள்ளனர். 100 வாக்காளர்களுக்கு ஓர் உறுப்பினர் என்ற அளவில் நியமிக்கப்பட்ட பூத் கமிட்டி உறுப்பினர்களின் விவரங்களை இந்தப் பார்வையாளர்கள் சரி பார்த்ததுடன், புதிய உறுப்பினர்கள் சேர்ப்பு நிகழ்வுகளையும் வீடு வீடாகச் சென்று மேற்கொள்வதை உறுதி செய்தனர். இந்தப் பணிகள் நிறைவடைந்த பிறகும், வாரம் ஒரு நாளேனும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிக்கு நேரில் சென்று களப்பணியாற்றி, வாக்காளர்களின் ஆதரவை உறுதி செய்யும் பணியும் தொகுதிப் பார்வையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டு உள்ளது.

கழகத்தின் கடைக்கோடித் தொண்டர்கள் வரை களத்தில் பணியாற்றும்போது, கழகத் தலைவர் என்ற பொறுப்பை உங்களால் அடைந்த கழகத்தின் மூத்த தொண்டனான உங்களில் ஒருவனான நானும் - தமிழ்நாடு முழுவதும் பயணித்து வருகிறேன். அரசு அறிவித்த திட்டங்கள் மக்களுக்கு எந்தளவில் பயன்களைத் தருகின்றன, எந்தெந்தத் திட்டங்களில் சுணக்கம் தெரிகிறது, அவற்றை மேம்படுத்த வேண்டிய வழிமுறைகள் என்ன என்பதை நான் மாவட்டந்தோறும் ஆய்வு செய்து, ஆலோசனைகளை வழங்கி, பணிகளை விரைந்து நிறைவேற்றச் செய்து வருகிறேன். கழகத்தின் மூத்த அமைச்சர்களும் இதே போல ஆய்வுப் பணியை மேற்கொண்டு, இளைய அமைச்சர்களுக்கும் வழிகாட்டுகிறார்கள்.

கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சருமான தம்பி உதயநிதியும் தமிழ்நாடு முழுவதும் கழக நிகழ்வுகளில் தொடர்ச்சியாகப் பங்கேற்பதுடன், கழக அரசின் திட்டங்கள் எந்தளவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை ஆய்வு செய்யும் பணிகளிலும் முனைப்பாகச் செயல்பட்டு வருவதை, நான் செல்லும் மாவட்டங்களில் என்னைச் சந்திக்கும் மூத்த அமைச்சர்களும் மாவட்டக் கழகச் செயலாளர்களும் தெரிவித்து வருகின்றனர்.

**கழகத்தில் எந்தவிதப் பிரதிபலனும் எதிர்பாராமல் நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞருக்காகவும், கருப்பு - சிவப்பு கொடியின் நிறமே தங்கள் குருதி நிறம் என்ற உணர்வுடனும் தங்கள் இளமை வாழ்வை இயக்கத்திற்கு அர்ப்பணித்து, இன்று மூத்த உறுப்பினர்களாகத் திகழ்பவர்களுக்கு மாவட்டந்தோறும் பொற்கிழி வழங்குகிறார் தம்பி உதயநிதி.**

**கழகம் என்றென்றும் வலிமையுடன் திகழ்ந்து, ஆதிக்க சக்தியினரையும், அவர்களிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் கூட்டத்தினரையும் ஒருசேர வீழ்த்த வேண்டும் என்பதற்காக அயராது பாடுபடும் மூத்த உறுப்பினர்களைத் தம்பி உதயநிதி மதித்துப் போற்றுகின்ற விதம் எனக்கு மிகவும் பிடித்துள்ளது. இதைத்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒன்றியத்திலும், நகரத்திலும், பேரூர்களிலும் பொறுப்பில் இருக்கும் கழகத்தினர் செய்ய வேண்டும்.**

## உங்களில் ஒருவன்

**மூத்த உடன்பிறப்புகளின் அர்ப்பணிப்பையும் நெஞ்சுறுதியையும் இளைய உடன்பிறப்புகள் பெற வேண்டும் என்பதை இளைஞரணிச் செயலாளர் பங்கேற்கும் இந்த நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.**

அதுபோலவே, தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை உருக்குலைத்து, தமிழ்நாட்டு மாணவமணிகளின் மருத்துவப் படிப்புக் கனவைச் சிதைக்கும் ‘நீட்’ எனும் கோடரிக்கு எதிராகத் தம்பி உதயநிதி அவர்கள் கழக இளைஞரணி - மாணவரணி - மருத்துவ அணியை இணைத்து தொடங்கியுள்ள கையெழுத்து இயக்கமும் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

நீட்டை விரட்டும் இயக்கத்திற்கான முதல் கையெழுத்தைக் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணி நடத்திய நிகழ்வில் உங்களில் ஒருவனான நான் போட்டேன். இந்தக் கையெழுத்து இயக்கத்தில், கழகத்தின் கடைக்கோடித் தொண்டர்கள் பங்கேற்று கையெழுத்திடுவது மட்டுமின்றி, அவரவர் பகுதியில் உள்ள பொது மக்களிடமும் மாணவர்களிடமும் நீங்கள் கையெழுத்தைப் பெற வேண்டும். 50 இலட்சம் என நிர்ணயித்திருக்கின்ற இலக்கையும் தாண்டி உங்களுடைய பங்களிப்பு இருக்க வேண்டும். குறிப்பாக மருத்துவக் கனவு சிதைகின்ற அச்சத்தில் உள்ள மாணவர்கள், ‘நீட்’ தேர்வினால் பெரும் அவதிக்கு உள்ளாகும் பெற்றோர் ஆகியோரிடம் கையெழுத்துப் பெற வேண்டும்.

இளைஞரணி சார்பில் வருகின்ற டிசம்பர் 17-ஆம் நாள் சேலம் மாநகரில் இளைஞரணியின் மாநில மாநாடு சீரோடும் சிறப்போடும் நடைபெற இருக்கிறது. மாநில உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்கத்துடன், இந்தியாவின் தென் திசையிலிருந்து எத்திசைக்கும் பரவுகின்ற வகையில் நடைபெறவுள்ள எழுச்சி மாநாட்டைக் கழகத்தினர் அனைவரும் ஒருங்கிணைந்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய கடமையையும் திராவிட முன்னேற்றக் கழகம் தன் தோளில் சுமந்துள்ளது. அதற்குப் பாக முகவர்களும், பூத் கமிட்டியினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். தொகுதிப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டிருப்போரும் வாரம் ஒரு முறையேனும் தொகுதிக்குச் சென்று பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைவரின் பணிகளையும் மூத்த தொண்டன் என்ற முறையில் கழகத்தின் தலைவனான நான் கண்காணித்து, ஒவ்வொரு தொகுதியின் நிலவரத்தையும் பெற்றுக் கொண்டுதான் இருப்பேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் எனும் புரட்சித் திட்டம், பேருந்துகளில் பெண்களுக்குக் கட்டணமில்லாத விடியல் பயணத் திட்டம், காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட மகத்தான திட்டங்களின் பயன்கள் மக்களிடம் சரியாகப் போய்ச் சேரவேண்டும். அது பற்றி அவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அரசின் திட்டங்கள் எவருக்கேனும் கிடைக்காமல் இருந்தால், அவர்கள் தகுதியான விண்ணப்பதாரர்களாக இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு அரசின் திட்டங்களின் பயன்கள் கிடைக்கும்படி செய்திட வேண்டியது தொகுதிக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள், ஒன்றிய - நகரச் செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பொறுப்பாகும்.

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியினைத் தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் நாட்களில் நம்முடைய கழகத்தினர் கண்ணும் கருத்துமாக இருந்து, யார் யார் உண்மையான வாக்காளர்கள், யார் யார் போலியானவர்கள், இறந்துபோனவர்கள் எத்தனை பேர், இடம் மாறியவர்கள் எத்தனை பேர், இரண்டு இடங்களில் பெயர் கொடுத்திருப்போர் யார் என்பது உள்ளிட்டவற்றைக் கவனித்திட வேண்டும்.

சென்னை மண்டல பாக முகவர்கள் கூட்டம் நடைபெறும் நாளான நவம்பர் 5-ஆம் நாளன்றுகூட வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணி நடைபெறவிருக்கிறது. தொகுதியின் ஒவ்வொரு வார்டிலும் இருக்கக்கூடிய பூத் கமிட்டி உறுப்பினர்களைக் கொண்டு அந்தப் பணியைத் தவறாமல் மேற்கொள்ள வேண்டும்.

**நாம் உழைப்பது நம் இயக்கத்தின் வெற்றிக்காக மட்டுமல்ல, நாட்டு மக்களின் விடுதலைக்காக! ஏழரை லட்சம் கோடி ஊழல் செய்ததாக சி.ஏ.ஜி.யால் குற்றம்சாட்டப்பட்டுள்ள பா.ஜ.க.வின் கைகளிலிருந்து காப்பாற்றும் வகையிலும், அவர்களுடன் கூட்டு சேர்ந்து நாட்டுக்கும் மக்களுக்கும் எண்ணற்ற துரோகங்கள் செய்துவிட்டு, இப்போது கூட்டணி முறிந்துவிட்டதாக வேடம் போடும் அ.தி.மு.க.வின் கள்ளக்கூட்டணியை அம்பலப்படுத்தும் வகையிலும் வீடு வீடாக உங்கள் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.**

நாற்பதும் நமதே, நாடும் நமதே என்று கடந்த 2022-ஆம் ஆண்டு விருதுநகரில் நடந்த முப்பெரும் விழாவில் என் முழக்கத்தை முன்வைத்தேன். அதைச் செயல்படுத்தும் வியூகங்கள் வலுப்பெற்று, இன்று இந்தியா முழுவதும் பா.ஜ.க. அரசுக்கு எதிரான அலை கடுமையாக வீசிக்கொண்டிருக்கிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா நம் வசம்தான்! ஜனநாயகம் காப்பதில் உறுதியாக உள்ள தோழமை சக்திகளுடன் இணைந்து மகத்தான வெற்றியைப் பெறுவோம்! அதற்கேற்ற வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடியாகக் களம் காணட்டும் கழகப் படை! வெற்றியை உறுதி செய்யும் உழைப்பை வழங்கட்டும்! இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054,
ஐப்பசி 16
02.11.2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 04-11-2023

# ஆளுநர் பதில் சொல்லியாக வேண்டும்

தான் பதில் சொல்ல வேண்டியவை எதற்கும் பதில் சொல்லாமல் - ஆரிய சனாதன வகுப்பு எடுத்துக் கொண்டு இருக்கிறார் ஆளுநர் ஆர்.என். ரவி. அவரைச் சட்டத்தின் நீதிமன்றத்தில் நிறுத்தி இருக்கிறது தமிழ்நாடு அரசு. இனி ஆளுநர் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதில் அவரது முகம் கிழித்தெறியப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு ஆளுநராக ஆர்.என்.ரவி கடந்த 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதவியேற்றார். அவர் பதவியேற்றது முதல், தமிழ்நாடு அரசுடன் தொடர்ந்து மோதல் போக்கை கடைப்பிடித்து வருவதையே வழக்கமாக கொண்டுள்ளார். தமிழ்நாடு அரசு அனுப்பும் கோப்புகளுக்கு உடனுக்குடன் கையெழுத்து போடாமல், ஒவ்வொரு கோப்புக்கும் விளக்கம் கேட்பதையே வழக்கமாக வைத்துள்ளார். அரசியல் எதிரி போன்று செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்நாடு சட்டமன்றமானது தனது கடமைகளைச் செய்ய விடாமல் முட்டுக்கட்டை போடுகிறார்.**

அரசியல் சாசன பிரிவுகள் 200 மற்றும் 163-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை ஆளுநர் தவறாகப் பயன்படுத்தி உள்ளதாக குற்றம்சாட்டியுள்ள தமிழ்நாடு அரசு, ‘நீட்’ விலக்கு மசோதா, பல்கலைக்கழக சட்டங்களை திருத்துவதற்கான மசோதா உள்ளிட்ட 12 மசோதாக்கள், 4 நடவடிக்கை உத்தரவுகள், 54 கைதிகளின் முன்கூட்டி விடுதலை தொடர்பான கோப்புகள் உள்ளிட்டவை தமிழ்நாடு ஆளுநரால் முடக்கி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் பதவி ஒரு சம்பிரதாய பதவி என்றும், ஆளுநர் அமைச்சரவை ஆலோசனையின்படி செயல்படக் கடமைப்பட்டவர் எனவும் முந்தைய வழக்குகளில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளதை சுட்டிக் காட்டியுள்ள தமிழ்நாடு அரசு, மசோதாக்கள் மற்றும் அரசு உத்தரவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க சர்க்காரியா கமிஷன் பரிந்துரை அடிப்படையில் கால வரம்பு நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

**மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் தாமதிப்பதன் மூலம் பேரவை செயல்பாடுகளையே ஆளுநர் தடுக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மற்றும் அரசமைப்புச் சட்டத்தின் செயல்பாட்டுக்கு முட்டுக்கட்டையாக அவரது செயல்பாடுகள் அனைத்தும் உள்ளது. பல்வேறு மசோதாக்களை நிலுவையில் வைத்துள்ளது மட்டுமின்றி, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகள் தொடர அனுமதி தருவதிலும் ஆளுநர் தாமதம் செய்கிறார். சரியான காரணங்களை தெரிவிக்காமல், அரசு அனுப்பும் கோப்புகளை ஆளுநர் திருப்பி அனுப்புகிறார். ஆளுநர் திருப்பி அனுப்பிய கோப்புகளை அரசு உரிய விளக்கத்துடன் மீண்டும் அனுப்பியபோதும் ஆளுநர் ஒப்புதல் தர மறுக்கிறார்.**

அரசால் அனுப்பப்படும் கோப்புகள், அரசாணைகள் மற்றும் கொள்கை முடிவுகளுக்கு ஒப்புதல் தராமல் தாமதிக்கும், ஆளுநரின் இந்த நடவடிக்கையால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் செயல்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு அவசர சட்டமும் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 6 வாரங்களில் அது நிரந்தரச் சட்டமாகியிருக்க வேண்டும். தற்போது வரை 12க்கும் மேற்பட்ட மசோதாக்களுக்கு கையெழுத்து போடாமல் ஆளுநர் ஆர்.என்.ரவி நிலுவையில் வைத்துள்ளார். இதனால் பல வகையில் அரசால் துரிதமாகச் செயல்பட முடியவில்லை.

கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகள் பதவிக்காலத்தை ஐந்து ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாக குறைப்பது தொடர்பான சட்டத்திருத்தம், மாநிலப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை அரசுக்கு வழங்குதல், தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக் கழகத்தை உருவாக்குவது உள்ளிட்ட மசோதாக்கள் அனுப்பப்பட்டுள்ளன. இவற்றை முடக்கி வைத்திருக்கிறார். இதனால் பல்கலைக் கழகங்கள் செயல்பாடு முடக்கப்பட்டுள்ளது. சித்த மருத்துவ பல்கலைக் கழகத்தின் நோக்கத்தையே சிதைக்கிறார்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சர்களாக இருந்த விஜயபாஸ்கர், ரமணா, வேலுமணி, தங்கமணி உள்ளிட்டோர் மீதான ஊழல் புகாரில் வழக்குப்பதிவு செய்ய 2022 செப்டம்பர் மாதம் தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியது. இதுவரை அனுமதி தராமல் ஆளுநர் இழுத்தடித்து வருகிறார். அமைச்சராக செந்தில்பாலாஜியை நீடிக்கக் கூடாது என்று சொல்லி பெரிய பிரச்சினையைக் கிளப்பிய ஆளுநர் ரவி, கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் அமைச்சர்கள் விஷயத்தில் எப்படி நடந்து கொள்கிறார் என்பதில்தான் அவரது உண்மையான முகம் வெளிச்சத்துக்கு வருகிறது.

“நான் திருப்பி அனுப்பவில்லை என்றால் நிராகரித்ததாக அர்த்தம்” என்று ஆணவமாகச் சொன்னவர் இந்த ஆர்.என்.ரவி. அந்தளவுக்கு அரசியலமைப்புச் சட்டத்தை கரைத்துக் குடித்தவர் அவர். எந்த சட்டமாக இருந்தாலும் ஒரு முறை விளக்கம் கேட்கலாம். திருப்பி அனுப்பலாம். இரண்டாவது முறை அரசு அனுப்பினால், அதனை ஆளுநர் ஏற்கத்தான் வேண்டும். அதைச் செய்வது இல்லை. அப்படியே ஊறுகாய் பானையில் ஊறப்போட்டு விடுவார். இதுதான் அவரது தந்திரம் ஆகும்.

நீட் விலக்கு மசோதாவை அரசியல் உள்நோக்கத்தோடு நிறுத்தி வைத்தார் என்றால், ஆன்லைன் ரம்மி மசோதாவையும் நிறுத்தி வைத்தார். ஆன்லைன் ரம்மி நடத்துபவர்களை ராஜ்பவனுக்கு அழைத்து பேசினார். இதை விட வெட்கக்கேடு இருக்க முடியுமா? ஆன்லைன் ரம்மி தடைச் சட்டத்துக்கு முன்னதாக பொதுமக்கள் கருத்தை தமிழ்நாடு அரசு கேட்டது. ‘இதற்கெல்லாமா பொதுமக்கள் கருத்தை கேட்பார்கள்?’ என்று கிண்டல் செய்தது பா.ஜ.க. ஆனால், ஆன்லைன் ரம்மி நடத்துபவர்களையே சந்தித்து பேசினார் ரவி. அப்போது பா.ஜ.க.வால் வாயைத் திறக்க முடியவில்லை.

**ஆண்டின் முதல் கூட்டத்தொடரின் முதல் நாளன்று ஆளுநர் உரையாற்ற வேண்டும் என்பது ஒரு வழக்கம். அரசு தயாரித்து தரும் உரையை வாசித்து விட்டுச் செல்ல வேண்டும். அதையே மாற்றியும் திருத்தியும் நீக்கியும் சேர்த்தும் தன் இஷ்டத்துக்கு தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டவர் ஆளுநர் என்பதை அகில இந்திய ஊடகங்கள் அனைத்துமே கண்டித்தன. அதன்பிறகும் அவர் திருந்துவதாகத் தெரியவில்லை.**

**உச்சநீதிமன்ற வழக்குக்குப் பிறகாவது திருந்துவாரா என்பதைப் பார்ப்போம்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் கடலூர் மாநகராட்சி, காந்தி பூங்காவில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், மாநில திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர் மு.நாகநாதன், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா.எழிலன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர். கடலூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ.தருண் தம்புராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடலூரில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட

# வீராங்கனை அஞ்சலை அம்மாள் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 4-**

**கடலூரில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் திருவுருவச் சிலையினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் கடலூர் மாநகராட்சி, காந்தி பூங்காவில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அஞ்சலை அம்மாள் அவர்கள் சிறுவயது முதல் சுதந்திரப் பற்று மிக்கவராக திகழ்ந்தார். 1921ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கிய போது அதில் கலந்து கொண்டு அஞ்சலை அம்மாள் தமது பொது வாழ்க்கையை தொடங்கினார். சென்னையில் நடைபெற்ற ஆங்கிலேய படைத் தளபதி ஜேம்ஸ் நீல் சிலை அகற்றும் போராட்டம், கடலூரில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகம் மற்றும் அந்நிய ஆடை எதிர்ப்பு போராட்டம், 1940ஆம் ஆண்டு நடைபெற்ற தனிநபர் சத்தியாகிரக போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதற்காக சிறை தண்டனை பெற்றார்.

அஞ்சலையம்மாள் விடுதலைப் போராட்டத்திற்காக தனது குடும்பச் சொத்துக்களையும், குடியிருந்த வீட்டையும் விற்று, நாட்டிற்காக தியாகம் செய்தார். “தென்னாட்டின் ஜான்சி ராணி” என்று மகாத்மா காந்தியடிகளால் அழைக்கப்பட்ட அஞ்சலையம்மாள் அவர்கள், மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

இத்தகைய சிறப்புமிக்க சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலையம்மாள் அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில், 2021-22ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றத் தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, அண்ணல் காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்குக் கடலூரில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, கடலூர் மாநகராட்சி, காந்தி பூங்காவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலகத்திலிருந்து, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், மாநில திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர் மு.நாகநாதன், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா.எழிலன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

கடலூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ.தருண் தம்புராஜ், கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.ராஜாராம், கடலூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.சுந்தரி, துணை மேயர் பா.தாமரைச்செல்வன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் கொள்ளுப் பேத்தி திருமதி இளவரசி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் ஆவணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, நவ. 4-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் (Tamil Nadu Digital Transformation Strategy DiTN) ஆவணத்தை வெளியிட்டார்.

2021-22ஆம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையில், விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுகக்கூடிய மற்றும் பதிலளிக்கும் வகையிலமைந்த, வெளிப்படையான நிருவாகத்தைக் குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மின்னாளுகையைப் படிப்படியாக அரசின் அனைத்து மட்டங்களிலும் புகுத்தி, அதன்மூலம் முழுமையானதொரு அரசாங்கத்தை எய்திடும் வகையில் “டிஜிட்டல் தமிழ்நாடு திட்டம்” செயல்படுத்தப்படும். மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட மற்றும் அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசுத் துறைகளின் செயல்பாடுகள் படிப்படியாக மின்மயமாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**ஒரு வழிகாட்டியாக பயன்படும்!**

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசின் ஆளுமை மற்றும் நிர்வாகத்தின் செயல்திறனை மேம்படுத்திடவும், டிஜிட்டல் ஆளுமை மற்றும் அரசின் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காகவும், தற்போதுள்ள மற்றும் எதிர்கால கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் அமைப்புகளைக் கருத்தில் கொண்டும் தமிழ்நாட்டில் முதல்முறையாக தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் (DiTN) வகுக்கப்பட்டுள்ளது. அரசின் துறைகள் தங்களுக்கான டிஜிட்டல் உருமாற்ற வியூகம் உருவாக்குவதற்கும், அதனை செயல்படுத்துவதற்கும் ஒரு வழிகாட்டியாக தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூக ஆவணம் பயன்படும்.

அனைத்துத் துறைகளும் தங்களது முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (Key Performance Indicators) மற்றும் பயன்களை (Outcomes) எய்துவதற்கு தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் உதவும். மேலும், தமிழ்நாட்டு மக்களுக்கு விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுகக்கூடிய, பதிலளிக்கக்கூடிய மற்றும் வெளிப்படையான (SMART Swift Monitorable, Accessible, Responsive and Transparent) நிர்வாகத்தை வழங்கும். தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம், டிஜிட்டல் முதிர்ச்சியை மதிப்பிடுவது முதல் தகவல்தொழில்நுட்ப வியூகத்தைச் செயல்படுத்துவது வரையிலான அனைத்து வழிகாட்டுதல்களை யும் வழங்கும்.

தமிழ்நாட்டில் டிஜிட்டல் மயமாக்கும் செயல்முறையை மேலும் வலுப்படுத்துதல், தொலைதூர இடங்கள் உட்பட மாநிலம் முழுவதும் தேவையான டிஜிட்டல் உள்கட்டமைப்பை பொதுமக்களுக்கு குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு வழங்குதல், மாநிலத்தை புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவுக்கான மையமாக மாற்றுதல், செயலிகள், வலைத்தளங்கள், கியோஸ்க்குகள் (KIOSK) போன்றவற்றின் மூலம் பொதுமக்களுக்கு அரசு சேவைகள் வசதியாக கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் முதல் மற்றும் இரண்டாம் நிலை நகரங்களுடன் டிஜிட்டல் இணைப்புகளை மேம்படுத்துதல் போன்றவை தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல்தியாகராஜன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் தீரஜ்குமார், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் இணை தலைமை நிர்வாக அலுவலர் திருமதி. பெ.ரமண சரஸ்வதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாசலபுரத்தில் ரூ 41.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள வாரச்சந்தை கட்டிடத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நேற்று (03.11.2023) தொடங்கி வைத்து சிறப்புரையாற்றி, மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன் உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் தேவநாதன், மகளிர் திட்ட அலுவலர் ரமேஷ் குமார், உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி கங்கா தாரணி, அறங்காவல் குழு தலைவர் மெடிக்கல் முரளி, ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி ஹேமலதா, அண்ணாதுரை முத்துச்செல்வன், கஸ்டம்ஸ் மகாலிங்கம் கார்த்திக் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில்

# விளையாட்டு அரங்கங்கள் - விளையாட்டு வளாகம் கட்டும் பணி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, நவ.4-**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், ரூ.23.14 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டுத் துறை கட்டமைப்புகளை திறந்து வைத்து, ரூ.49.79 கோடி மதிப்பீட்டில் 9 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள், கோபாலபுரத்தில் குத்துச்சண்டை அகாடமி மற்றும் தென்காசியில் மாவட்ட, விளையாட்டு வளாகம் கட்டும் பணிகளுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டுமேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், 23 கோடியே 13 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு விடுதி, நிர்வாக அலுவலகக் கட்டடம் மற்றும் தங்கும் விடுதி, உள்விளையாட்டு அரங்கம், செயற்கை இழை தடகள ஓடுதளம் மற்றும் 5 நபர் அணிகளுக்கான செயற்கை இழை ஹாக்கி மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்து, 9 சட்டமன்றத் தொகுதிகளில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்களும், கோபாலபுரத்தில் 7.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குத்துச்சண்டை அகாடமியும், தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகம் ஆகிய விளையாட்டு உட்கட்டமைப்பு பணி களுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் (Sports Quota) மூன்று விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு விடுதி, நிர்வாக அலுவலகக் கட்டடம் மற்றும் தங்கும் விடுதி, உள்விளையாட்டு அரங்கம், செயற்கை இழை தடகள ஓடுதளம் மற்றும் 5 நபர் அணிகளுக்கான செயற்கை இழை ஹாக்கி மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்து, 9 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்களும், கோபாலபுரத்தில் குத்துச்சண்டை அகாடமியும், தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் ஆகிய விளையாட்டு உட்கட்டமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. மேலும், மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து பாலநன்கொடை பெற்று ஏற்படுத்திட "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"யை உருவாக்கியது, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 1 கோடியே 85 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு விடுதி;

பெரம்பலூர் மாவட்டத்தில் 1 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் நிர்வாக அலுவலகக் கட்டடம் மற்றும் தங்கும் விடுதி;

வேலூர் மாவட்டம், காட்பாடியில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 10 கோடியே 81 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கம்;

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்ட நேரு விளையாட்டு அரங்கத்தில் 6 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை தடகள ஓடுபாதை;

சென்னை, எழும்பூரில் உள்ள மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கத்தில் 2 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 நபர் அணிகளுக்கான செயற்கை இழை ஹாக்கி மைதானம்;

என மொத்தம் 23 கோடியே 13 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டுத் துறை கட்டமைப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

தென்காசி மாவட்டத்தில் 18.12.2022 அன்று நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதலமைச்சர் அவர்கள் "புதிதாக அமைந்துள்ள தென்காசி மாவட்டத்தில் புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்படும்." என்று அறிவித்தார்கள்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் 2023-2024ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையில், சட்டமன்றத் தொகுதிகளில் விளையாட்டு வீரர்களின் உடற் தகுதி மற்றும் விளையாட்டு வளர்ச்சியினை தூண்டும் வகையில் 10 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

2022 - 2023ஆம் நிதி ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மானிய கோரிக்கையில், "சென்னையில் இளைஞர்களின் குத்துச்சண்டை ஆர்வத்தினை ஊக்குவிக்க 2 கோடி ரூபாய் செலவில் மற்றுமொரு குத்துச்சண்டை அகாடமி அமைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புகளுக்கிணங்க, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கொளத்தூர் மற்றும் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி, திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி, திருப்பூர் மாவட்டம் காங்கேயம், மதுரை மாவட்டம் சோழவந்தான், தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி, சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் ஆகிய 9 சட்டமன்றத் தொகுதிகளில் தலா 3 கோடி ரூபாய் வீதம், மொத்தம் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மேலும், தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில், அனைத்து வசதிகளுடன் கூடிய திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டரங்கங்களை உள்ளடக்கி 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் சென்னை, கோபாலபுரத்தில் 7 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள குத்துச்சண்டை அகாடமி ஆகிய பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் மூன்று விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

தமிழ்நாட்டின் சார்பாக ஒலிம்பிக் மற்றும் பிற சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்களை ஊக்குவித்திடும் வகையில் அவர்களுக்கு அரசுத் துறைகள் / பொதுத்துறை நிறுவனங்களில் (PSUs) 3 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் வேலைவாய்ப்பு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பாரா தடகள வீரர் எஸ்.மனோஜ் அவர்கள் இந்தோனேசியாவில் அக்டோபர் மாதம் நடைபெற்ற ஆசியன் பாரா விளையாட்டுப் போட்டியில் பங்கேற்றமைக்காவும், ஜெர்மனியில் 28.07.2023 முதல் 5.08.2023 வரை நடைபெற்ற உலக உயரம் குன்றிய மனிதர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் குண்டு எறிதல் பிரிவில் பங்கேற்று முதல் இடம் பிடித்து வெற்றி பெற்றமைக்காகவும், விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த தடகள வீரர் ஆனந்தன் அவர்கள் அரியானா மாவட்டத்தில் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற 18வது தேசிய அளவிலான பாரா விளையாட்டுப் போட்டியில் 200 மீட்டர் மற்றும் 400 மீட்டர் ஓட்டப்போட்டியில் முதல் இரு இடங்களில் வெற்றி பெற்றமைக்காகவும், இந்தோனேசியாவில் அக்டோபர் மாதம் நடைபெற்ற ஆசியன் பாரா விளையாட்டுப் போட்டியில் 200 மீட்டர் மற்றும் 400 மீட்டர் ஓட்டப்போட்டியில் 2ம் மற்றும் 3ம் இடம் பிடித்து வெற்றி பெற்றமைக்காகவும் விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் இளநிலை அலுவலராக தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த தடகள வீராங்கனை செல்வி.ரோஸிமீனா அவர்கள் 2021ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற 24வது ஃபெடரேஷன் கோப்பை தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் போல்வால்ட் பிரிவில் முதலிடத்தில் வெற்றி பெற்றமைக்காகவும், அதே ஆண்டு ஜுன் மாதம் பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற 60வது தேசிய அளவிலான சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் போல்வால்ட் பிரிவில் 3ஆம் இடம் பெற்றமைக்காகவும் விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் இளநிலை அலுவலராக தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறு வனத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டு வீரர்கள் எஸ்.மனோஜ், ஆனந்தன் மற்றும் செல்வி.ரோஸிமீனா ஆகியோருக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு - வர்த்தகத் துறை சார்ந்த பொதுத்துறை நிறுவனங்கள் சார்பில்

# தமிழ்நாடு அரசுக்கு இந்தாண்டுக்கான பங்கு ஈவுத்தொகை ரூ.307.22 கோடி!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கப்பட்டன!

சென்னை, நவ. 4-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் தொழில், முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO), தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT), தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) மற்றும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (TNPL) ஆகியவற்றின் சார்பாக தமிழ்நாடு அரசுக்கு 2022 - 2023ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத்தொகையாக மொத்தம் 307 கோடியே 22 இலட்சத்து 28 ஆயிரத்து 309 ரூபாய்க்கான காசோலைகள் / வரைவோலையை வழங்கினார்.

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO)**

தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில்களை மேம்படுத்தவும், கூட்டு முயற்சிகள் வழியாக முதலீட்டை ஈர்த்து, மாநிலத்தை உலகளாவிய தொழில் மையமாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு, 2022 - 2023 ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத்தொகையாக 204 கோடியே 1 இலட்சத்து 19 ஆயிரத்து 409 ரூபாய்க்கான காசோலையை வழங்கியுள்ளது.

**தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT)**

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மாநிலத்தில் பரவலாக தொழில் பூங்காக்களை உருவாக்கி, நிர்வகித்து வருகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு, 2022 - 2023ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத் தொகையாக 75 கோடியே 81 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கியுள்ளது.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC)**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாட்டின் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. இக்கழகம், தமிழ்நாடு அரசுக்கு 2022 - 2023ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத் தொகையாக 15 கோடியே 17 இலட்சத்து 61 ஆயிரத்து 400 ரூபாய்க்கான காசோலையை வழங்கியுள்ளது.

**தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (TNPL)**

கரும்பு சக்கையை முக்கிய மூலப்பொருளாகக் கொண்டு, செய்தித்தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்கும் பொருட்டு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தற்போது, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை, உயர்ரக காகித உற்பத்தி என படிப்படியாக விரிவாக்கங்களை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு 2022 - 2023 ஆண்டிற்கான பங்கு ஈவுத் தொகையாக 12 கோடியே 22 இலட்சத்து 24 ஆயிரத்து 500 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கியுள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், ஹன்ஸ் ராஜ் வர்மா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் மு.சாய்குமார், 'டிட்கோ' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, "சிப்காட்" நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.செந்தில்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## தேர்வுக்குழுக்களின் பரிந்துரைகளின்படி பல்கலைக்கழகங்களில்

# அரசு நியமித்த துணைவேந்தர்களை நியமிக்க ஆளுநருக்கு உத்தரவிடுக!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மேலும் ஒரு வழக்கு!

புதுடெல்லி, நவ.4 -

சென்னை பல்கலைக்கழகம், கல்வியியல் பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் ஆகிய 3 பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்களை தேர்வு செய்வதற்கான குழுக்களை அமைத்து தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி சில மாதங்களுக்கு முன் உத்தரவிட்டிருந்தார்.

ஆளுநரின் இந்த செயலுக்கு தமிழ்நாடு அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. ஆளுநரின் நடவடிக்கை சட்டரீதியாக எதிர்கொளப்படும் என உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அரசு நியமித்த தேர்வுக் குழுக்களின் பரிந்துரைகளின்படி பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை நியமிக்க ஆளுநருக்கு உத்தரவிடக் கோரி தமிழநாடு அரசு உச்சநீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாட்டில் உயர்கல்வி துறையின் கீழ் 13 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருவதாகவும், இப்பல்கலைக்கழகங்களுக்கென தனித்தனியே சட்டம் மற்றும் விதிகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின்படி துணைவேந்தர்களின் பதவிக்காலம் முடிந்தவுடன் அதனை நிரப்ப மாநில அரசு அமைக்கும் தேடுதல் குழுக்கள் மூலம் துணைவேந்தர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுவார்கள் என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு அரசு, உயர் கல்வித் துறையின்கீழ் இயங்கும் பல்கலைக்கழக சட்டவிதிகளில், ஆளுநர், துணை வேந்தரை தேர்வு செய்யும் தேர்வுக்குழுக்களை அமைக்க வழிமுறை இல்லை என்றும் தெரிவித்துள்ளது.

இதுவரை தேடுதல் குழு உறுப்பினர்கள் அந்தந்த பல்கலைக்கழக சட்டவிதிகளின்படி நியமிக்கப்பட்டு அரசாணை வெளியிட்டு, அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் தற்போது ஆளுநர் நடைமுறையில் உள்ள பல்கலைக்கழக சட்ட விதிகளுக்கு எதிராக தேடுதல் குழுக்களை தன்னிச்சையாக முடிவு செய்து அறிவிக்கை வெளியிட்டுள்ளார் என்றும், ஆளுநரால் அமைக்கப்பட்டுள்ள இந்த தேடுதல் குழுக்கள் முழுக்க முழுக்க பல்கலைக்கழக சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு மாறானது என்றும் தமிழ்நாடு அரசு தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்நாடு ஆளுநர் அமைத்துள்ள தேடுதல் குழுக்கள் விதிகளுக்கு எதிரானது என அறிவிக்க வேண்டும் என்றும், அரசு நியமித்த தேர்வுக்குழுகளின் பரிந்துரைகளின்படி பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்க ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் வலியுறுத்தி உள்ளது.

**அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க புத்தகத் திருவிழாவை ஊக்குவிக்கும் ஒரே முதலமைச்சர், மு.க.ஸ்டாலின்!**

# பா.ஜ.க.வின் பாசிசத்தை வீழ்த்த வள்ளலாரின் நெறியையும் ஏற்போம்!

## திண்டுக்கல்லில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் "வள்ளலார் - 200" சிந்தனையரங்கில் ஆ.இராசா எம்.பி. பேச்சு!

**திண்டுக்கல், நவ.4 –**

**திண்டுக்கல்லில் நடைபெற்ற புத்தகத் திரு விழாவில் "வள்ளலார் - 200" சிந்தனையரங்கில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு பேசும்போது "பா.ஜ.க. வின் பாசிசத்தை வீழ்த்த வள்ளலாரின் நெறியையும் ஏற்போம்" என்றும் "அறி வார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க புத்தகத் திருவிழாவை ஊக்குவிக்கும் ஒரே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்" என்றும் கூறினார்.**

**திண்டுக்கல் இலக்கியக் களம் சார்பில் 13.10.2023 அன்று நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு "வள்ளலார் 200" சிந்தனை யரங்கில் ஆற்றிய உரை வருமாறு: –**

தமிழ் நாட்டில் நடைபெறும் புத்தகத் திரு விழாக்களில் திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் நம்முடைய முத லமைச்சர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், அரசும் அதிலே பங்கெடுக்கும் என்கின்ற அறிவிப்பை வெளியிட்டு, "தமிழ்ச் சமுதாயம் அறிவார்ந்த சமுதாய மாக தொடர வேண்டும்; அடுத்த தலைமு றைக்கும் அந்த அறிவு சென்று சேர வேண் டும் என்பதற்காக வாசிப்பு வழக்கத்தை இளைஞர்களிடத்தில், பெரியவர்களிடத்தில் ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக இன் றைக்கு தமிழ்நாட்டில் இருக்கும் எல்லா மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழாக்கள் நடைபெற்று, புத்தகங்கள் வாங்குவதும் வாசிப்பதும் மட்டுமல்லாமல், மாலை நேரங்களில் இப்படி சிந்தனை களங்களை அமைத்து, அதில் அறிவை பரப்புகின்ற, பகிர்ந்துகொள்கின்ற நல்ல நிகழ்வுகள் இன் றைக்கு மாநிலம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எங்கே மனம் செம்மாந்து நிற்கிறதோ; எங்கே அறிவு விடுதலை பெற்று விளங்குகிறதோ; எங்கே குறுகிய சாதி மதப் பிளவுகளால் உலகம் உடையாமல் ஒன்று பட்டு நிற்கிறதோ; எங்கே பகுத்தறிவு வெள் ளம் மூடநம்பிக்கை என்னும் பாலைவனத் தில் வீழ்ந்து பாழ்படாமல் இருக்கிறதோ; எங்கே பரந்து விரியும் சிந்தனையாலும், செயலாலும் எண்ணங்கள் வழிநடத்தப்படு கிறதோ, அங்கிருந்து என் அன்னை நாடு விழித்தெழ வேண்டும் என்று தாகூர் கனவு கண்டார்.

**வள்ளலார் பற்றி இருவேறு கருத்துகள்!**

அறிவு வளர்ந்தால்தான் தன் அன்னை நாடு விழிப்படையும் என்று தாகூர் கண்ட கனவை நிறைவேற்றுகின்ற ஒரு முதல மைச்சர் நமக்குக் கிடைத்திருக்கின்ற கார ணத்தினால் இந்த மாலை நேரத்தில் இவ்வ ளவு பேரும் நாம் கூடி வள்ளலாரை பற்றி சிந்திக்கின்ற ஒரு வாய்ப்பாக இந்த புத்தகத் திருவிழா அமைந்திருக்கிறது. எனவே அர சுக்கும், முதலமைச்சருக்கும் என்னுடைய நன்றியை உங்களின் சார்பில், நான் தெரி விக்க கடமைப்பட்டிருக்கிறேன். நான் எத்த னையோ மேடைகளில் பேசி இருக்கிறேன். ஆனால் வள்ளலாரை பற்றி அவ்வப்போது மேடைகளில் தொட்டிருக்கிறேனே தவிர, முழுமையாக அவரை ஆய்ந்து பேசுகின்ற வாய்ப்பினை பெறவில்லை. அப்படி ஒரு வாய்ப்பை அல்லது ஒரு நெருக்கடியான சோதனையை திண்டுக்கல் சிந்தனைக் களம் இந்த புத்தகத் திருவிழா வழியாக எனக்கு தந்திருக்கிறது.

ஏனென்றால் வள்ளலாரை பற்றிய இரு வேறு கருத்துக்கள் அவருடைய நெற்றியில் திருநீறு இருக்க வேண்டுமா? இருக்கக் கூடாதா? என்பதில் தொடங்கி, அவர் சைவ சமயமா? சைவ சமயம் இல்லையா? என்பதில் வளர்ந்து.

அவர் ஆன்மிகத்தில் புரட்சி செய்தாரா? இல்லை இருக்கின்ற அமைப்பை ஏற்றுக் கொண்டாரா, சீர்திருத்தம் வழங்கினாரா? என்பது போன்ற விவாதம் உச்சம் பெறு கின்ற இக்கால கட்டத்தில் வள்ளலார் வெவ் வேறு வடிவங்களில் பேசப்படுகிறார்; விவா திக்கப்படுகிறார். அந்த விவாத தளத்தை நம்முடைய முதல்வர் தந்த 'வள்ளலார் 200' விழாக்களில் முன்னெடுப்பது இன் றைய ஆன்மிகத் தேடலாக மட்டுமல்ல; அர சியல் தேடலாகவும் அமைய வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

**அறிவு சபை தோற்றுவித்த முதல் புரட்சியாளர்!**

வள்ளலார் என்ன போதித்தார் என்பதை பெரிதாக நான் மீண்டும் விளக்கி இங்கே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவ்வளவு நூல்கள் அவரைப்பற்றி கிடைக் கின்றன. 'சுத்த சன்மார்க்க சங்கம்' என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார். ஞான சபையை ஏற்படுத்தினார். மடங்கள் இருந்த மண்ணில் அறிவு சபையை தோற்றுவித்த முதல் புரட்சியாளர், ஆன்மிகத்தில் அவர் தான். பசிப்பிணியை போக்க வேண்டும் என்று விரும்பினார்.

இருக்கிற எல்லா அமைப்புகளையும் கட வுளாக இருந்தாலும், மதமாக இருந்தாலும் இவற்றையெல்லாம் விட்டுவிட்டு ஒரு புதிய மாற்று பாதையை தேர்ந்தெடுக்க வேண் டும் என்று விரும்பினார். அதற்கு அவர் சொன்ன தத்துவங்கள் எல்லாம் ஜீவகாருண்யம், கருணை, அன்பு, பசி போக்கல் என்று மொத்தமாக தொகுத்து 10 நிமிடத்தில் அல்லது 5 நிமிடத்தில் விளக்கிச் சொல்லிவிடலாம். ஆனால் வள்ளலாரை நான் மீண்டும் படிக்கிறபோது, வள்ளலார் இன்றைக்கு எப்படி தேவைப்படுகிறார் என்று எண்ணத் தோன்றியது. ஏனென் றால் வள்ளலார் இந்த சமுதாயத்தில் 200 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். ஒரு மனிதரைப் பற்றி பார்க்கிறபோது அவரு டைய தொடக்க காலம், இடைக்காலம், கடைசி காலம் இவற்றையெல்லாம் கருத்தி யல் ரீதியாக பார்க்க வேண்டி இருக்கிறது. எல்லா தலைவர்களும் ஒரே மாதிரி இருந்த தில்லை. எனக்குத் தெரிந்து கலைஞர் சொல்வார், "நான் பிறந்து அறிவு வளர்கிற போதே சிந்திக்கின்ற உணர்வை பெற்ற வன்; 13 வயதிலேயே சுயமரியாதை எண் ணம் கொண்டவன்; மரணம் வரை சுயமரியாதைக்காரனாகத்தான் இருக்க விரும்புகிறேன்" என்று.

வார்த்தைக்கும், வாழ்க்கைக்கும் இடை வெளி இல்லாமல் பார்த்துக் கொள்பவன் யாரோ, அவன்தான் உயர்ந்த மனிதன் என்று பெர்னாட் ஷா சொன்னார். ஆனால் அப்படி இருந்தே தீரவேண்டும் என்ற அவ சியம் இல்லை. மனிதன் மாறுதலுக்கு உட் பட்டவன்தான். அந்த மாறுதலுக்கான கார ணம் நியாயமானதா, பொருத்தமானதா, சுயநலமற்றதா என்றுதான் ஆராய வேண் டுமே தவிர; மாறுதலே கூடாது என்று சொல்ல முடியாது.

கண்ணதாசன் ஒரு காலத்தில் நாத்திகம் பேசியவர். 'நாத்திகம் பேசி நாதனும்பு ஏறி யது என்னுடைய நா' என்று சொல்லி பின் னாளில் வருந்தியவர். அண்ணாவின் அணிவகுப்பில் அவர் வலம் வந்த காலங் கள் உண்டு. 'அர்த்தமுள்ள இந்து மதம்' என்ற புத்தகம் எழுதிய கண்ணதாசன், இந்து மதத்தின் சாரங்களில் மூழ்கி மூழ்கி திழைத்து இதுதான் மார்க்கம், "இதுதான் எனக்கு இன்பம். இதைப் பின்பற்றுங்கள்" என்று சொன்ன கண்ணதாசன், பெரியார் மறைந்தபோது பாடினார்,

**"நீதிமன்றின் நீதிக்கும் நீதி சொல்வார்;**

**நெறிகெட்டு வளர்ந்தவர்களை நிமிர்த்தியவர்;**

**ஜாதி எனும் நாகத்தை தாக்கித் தாக்கி;**

**சாகடித்த பெருமை அவர் தடிக்கே உண்டு"**

என்று பாடினார். அது பெரியாரைப் பற்றி கண்ணதாசனின் மதிப்பீடு. ஆனால் கண் ணதாசனின் வாழ்க்கையில் முரண்பாடு இருந்ததா என்றால் நிச்சயமாக இருந்தது. கடைசியில் அந்த முரண்பாடுகளை காலம் கவனத்தில் வைக்கவில்லை; அவர் பழுத்த பக்திமானாய் - கண்ணனை ஆராதித்த இந்து மத பற்றாளராய்தான் மறைந்தார்; அது அவருக்கு அடையாளமாய் நின்றது; நிற்கிறது.

**புரட்சிக் கவிஞரின் அடையாளம்!**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர் வாழ்க்கையின் முற்பகுதியில் 'சுப்ரம ணிய துதியமுது' எழுதியவர். இறை நம் பிக்கை கொண்ட கனகசுப்புரத்தினம் என்ற புலவர்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆனார். பக்தி மட்டுமல்ல; பின்னாளில் அழகியலை, இயற்கையைவானத்தைகட லைகாட்டைஆறுகளைதென்றலை அவர் கவிதையில் புனைந்து காட்சிப்படுத்திய



போது ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியரை யும் மிஞ்சினார் என்று போற்றப்பட்டார். ஆனால் அவரை இந்த அடையாளங்கள் நிறைவு செய்யவில்லை.

**இருட்டறையில் உள்ளதடா உலகம்-சாதி**

**இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே!**

**மருட்டுகின்ற மதத்தலைவர் வாழுகின் றாரே**

**வாயடியும் கையடியும் மறைவதென் னாள்?**

என்று எழுதியவர்;

**கடவுள் என்ற கட்டறுத்து**

**தொழில் உளாரை ஏவுவோம்**

என்று பிரகடனப்படுத்தியவர்;

**மண்மீதில் உழைப்போரெல்லாம் வறியவராம்; உரிமை கேட்டால்**

**புண்மீதில் அம்பு பாய்ச்சும் புலையர் செல்வராம் இதைத்தன்**

**கண்மீதில் பகலிலெல்லாம் கண்டு கண்டு அந்திக்குப்பின்**

**விண்மீனாய் கொப்பளித்த விரிவானம் பாராய் தம்பி!**

என்று அழகியலை சமூக தளத்தில் கொண்டு சென்று நிறுத்தியவர். உழைக் கும் மக்களை சுரண்டி வஞ்சித்து வாழும் முதலாளித்துவத்தை பார்த்து வானத்தில் ஏற்பட்ட கொப்புளங்கள்தான் விண்மீன் என்று அழகியலை சமூக அவலத்தோடு பொருத்திப் பார்த்தார். இந்த சமூக அமைப்பை மாற்ற வேண்டும் என்று கவிதை சொன்னதால் அவர் புரட்சிக் கவிஞர்; அதுதான் அவர் அடையாளம்; ஆன்மிகமோ, அழகியலோ அல்ல.

அதேபோல வள்ளலாருக்கு எது அடை யாளம்? வள்ளலார் ஒரு காலத்தில் சைவத்தை தூக்கிப் பிடித்தார். திருநீறு அணிந்திருந்தார். பதி, பசு, பாசம் என்கின்ற மெய்கண்டதேவரின் சிவஞானபோதத்தை சைவ சித்தாந்தத்தை உள்வாங்கி ஒப்புக் கொண்டார். அதற்காக பல பாடல்களை பாடி னார். அவர் எழுதிய ஆறு திருமறைகளில் ஐந்து திருமறைகள் சைவம் சார்ந்தவை. 200 ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த ஒரு மனிதனை, நாம் ஆராய்ச்சி செய்வதில் பிழையில்லை. பார்க்கின்ற புதிய பார்வை யில் தவறில்லை. என் பார்வை தவறாக கூட இருக்கலாம். ஆனால் வள்ளலார் ஒரு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவர். அவர் சொன்ன ஆன்மிகம் எது? அவரின் தொடக்கப் புள்ளி எது? மையப் புள்ளி எது? முடிவில் என்ன சொன்னார்? எதை வைத்து வள்ளலாரை அடையாளப்படுத்துவது.

அவர் எந்த அடையாளத்தை தன் இறுதி அடையாளமாக கொள்ள வேண்டினார். எப் படி பாரதிதாசனுக்கு 'சுப்ரமணிய துதியமுது' அடையாளமில்லையோ - எப்படி கண்ண தாசனுக்கு கறுப்பு சிந்தனை கடவுள் மறுப்பு அடையாளமில்லையோ அப்படி வள்ளலா ருக்கும் சைவமோ - இந்து மதமோ அடை யாளமாக இருக்க முடியாது.

வள்ளலார் தோன்றி அவருடைய சிந்த னைகள் முழுமையாக முழு வீச்சிற்கு வீரி யத்தோடு வந்த காலத்தில் இந்த உலகம் புதியபாய்ச்சலைகண்டகாலம். 1848லிருந்து 1868க்குள் 20 ஆண்டுகள் உலகத்திற்கு ஒரு புதிய முகம் கிடைத்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை, டார்வினின் புதிய தத் துவமான உயிர் கோட்பாட்டு பரிணாமக் கொள்கை, மைக்கேல் பாரடே மின்சாரத்தை கண்டுபிடித்த அறிவியல் விந்தை ஆகியவை யாவும் அந்த 20 ஆண்டுகளில்தான் நடந்தேறின. உலகத் தின் பொற்காலம், அந்த 20 ஆண்டுகள். அப்போது இந்த பூமிக்கு மின்சாரம், பொது வுடமை தத்துவம், உண்மையான பரி ணாம அறிவியல் கோட்பாடு இந்த மூன் றும் வந்த காலத்தில் – புழுங்கிய நேரத்தில் ராமலிங்கர் வாழ்ந்திருக்கிறார் என்பது இயற்கையாகவே ஒரு வரலாற்று தொடர்பு என்று நாம் கருத வேண்டும். உலகத்திற்கு புதுமை நிகழ்ந்தபோது தமிழ் நாட்டுக்கு வள் ளலார் புதுநெறியை கண்டு தந்தவர். அவர் ஏன் பசிப்பிணியை போக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஏனென்றால் ஒவ் வொருவருடைய வாழ்க்கையையும் புறச் சூழல் தீர்மானிக்கிறது. இந்த சமுதாயம் என்னை எப்படி வைத்திருக்கிறதோ, எப்படி பார்க்கிறதோ அப்படித்தான் இந்த சமுதா யத்தை எதிர்த்து நான் எதிர்வினை ஆற்ற முடியும் அல்லது ஒத்துப் போக முடியும்.

**வள்ளலார் முன்னிறுத்திய வாழ்வியல் கொள்கை!**

நான் ஏன் கருப்பு சட்டைக்காரனாக மாறினேன். என்னுடைய தந்தையார் கந்த சஷ்டி கவசம் சொல்லும்போது பக்கத்தில் இருந்து என்னுடைய காதில் விழுந்து விழுந்து விழுந்து எனக்கே மனப்பாடமான ஒரு சிறுவன். ஆனால் என்னுள் ஏதோ ஒரு வேதி மாற்றம், என்னை பெரியார் பக்கம் திருப்பியது. இது புறச் சூழல் எனக்கு கொடுத் திருக்கிற தாக்கம். அந்த தாக்கத்தின் விளைவு இன்றைக்கு நான் திராவிட முன் னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செய லாளராக இருக்கிறேன்.

இப்படி ஒவ்வொருவருக்கும் புற மாற்றங் கள் ஏற்படுகிறபோது, அது ஏற்படுத்திய மாற் றங்கள் என்ன என்பதை உணர வேண் டும். ஏன் பசிப்பிணியைப் பற்றி வள்ளலார் கவலைப்பட்டார். 1860 களில் 50களில் வள்ளலார் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் மிகப்பெரிய பஞ்சம் கொடி கட்டி கோலோச் சிய காலம். நான் இன்னும் பார்க்கிறேன்; அவர் சொன்ன ஜீவகாருண்யம் என்று சொல்கிறபோது அனைத்து உயிர்களிடத்தி லும் கருணை, மனிதர்கள் மேல் மட்டு மல்ல; வள்ளலாருக்கு இருக்கும் மிகப்பெரிய சிறப்பு மனிதனை மனிதன் நேசி என்று சொன்னால் அது வேறு. பெரியார் அதைத் தான் சொன்னார், மனிதனை மனிதன் நேசி. மனிதன் கடவுளை நேசிக்க வேண் டும் என்று சொல்வது இன்னொரு ஆன்மத் தத்துவம். ஆனால் எல்லா உயிர்களிடத் திலும் கருணை காட்ட வேண்டும் என்பது வள்ளலாரின் பரந்து விரிந்த தத்துவம்.

ஆண்டவனிடத்தில் அன்பு வை. ஆண் டவன் காப்பாற்றுவார் என்று சொல்ல வில்லை. ஆண்டவனிடத்தில் அன்பு, சக உயிர்களிடத்தில் கருணை, பசி போக்கல் இவைதான் ஒழுக்கமாக முன்னிறுத்தப்பட்டு ஜீவகாருண்யமாக வள்ளலாரால் வரிக்கப் பட்டு வாழ்வியல் கொள்கையாக முன்னி றுத்தப்பட்டது. இன்றைக்கும் வடலூரில் அவரால் ஏற்றிவைக்கப்பட்ட அணையா நெருப்பு இன்னமும் எரிந்து கொண்டிருக்கி றது. எரிந்து கொண்டிருக்கின்ற அந்த அணையா விளக்கிலிருந்து பசிப்பிணிக்கு மருந்து கிடைக்கிறது. உணவளிக்கப்படுகி றது. இந்த ஜீவகாருண்யத்தை அவர் தோற் றுவிக்க வேண்டிய காரணம் என்ன? அவ ருக்கு என்ன அழுத்தம்? அங்கு இருந்து தான் அவருடைய சமூகப் பார்வையை, அவருடைய பொருளியல் பார்வையை பார்க்க வேண்டும். அவருடைய கொள் கைக்குப் பின்னால் வரலாற்று உண்மை கள் உள்ளது.

**திராவிட சமயம்!**

சைவத்தையும் வைணவத்தையும் 'சம யம்' என்று குறிப்பிடுகிறார். வேதாந்தத்தை யும், சித்தாந்தத்தையும் 'மதம்' என்று குறிப் பிடுகின்றார். என்ன தெரிகிறதென்றால் சைவமும் வைணவமும் மதம் அல்ல; சம யம். சமயம் தமிழ்ச் சொல். சமயம் என் றால் 'பொருந்துதல்' என்று பொருள். உலக வாழ்க்கைக்கு பொருந்த வேண்டியவை என்ற அடிப்படையில் அவைகள் உருவாக் கப்பட்டன. மதம் அப்படியல்ல. 1860 களில் வள்ளலார் வாழ்ந்தபோது சைவமும் வைணவமும் மதங்களல்ல; வேதாந்தம் சித்தாந்தம் இரண்டும் மதங்கள். இன்னும் விளக்கி சொல்வதாக இருந்தால் வள்ளலார் வாழ்ந்தபோது நாமெல்லாம் இந்துக்கள் அல்ல; ஏனென்றால் அப்போது இந்து மதம் இல்லை. சிவனை வழிபடுகின்றவர்கள் சைவர்களாக இருந்தார்கள்; திருமாலை வணங்குபவர்கள் வைணவர்களாக இருந் தார்கள். பிறகு இந்துக்களாக ஆக்கப்பட்டோம்.

வள்ளலார் சொன்னதை விரித்து இதற்கு மேல் பேசினால் என்னை இந்துக்களுக்கு எதிரி; இந்து மதத்தை இழிவு படுத்திவிட்டார் என்று கூச்சல் வரும். ஏன் சைவத்தை விட்டு வள்ளலார் வெளியே வந்தார் என் றால்; வைணவம் சைவம் இவற்றையெல் லாம் விட்டு ஒழியுங்கள் என்று ஏன் சொன் னார் என்றால்; இன்னும் குறிப்பாக சைவம் வைணவம் ஆகிய சமயங்களில் இருந்தும். வேதாந்தம் சித்தாந்தம் ஆகிய மதங்களில் இருந்தும் நீங்கள் விட்டு வெளியே வந்தால் தான் பேரின்ப இறைவனை அடைவதற்கு வழி கிடைக்கும் என்று உணர்ந்து உணர்த் தியவர். ஆரியர்களுக்கு 'மதம்' இருந்தது.

நம்முடைய திராவிட 'சமயம்'. வைண வமும் சைவமும் இங்கே தோன்றியது தான். அறுபத்து மூன்று நாயன்மார்களில் எல்லா சாதியும் இருந்திருக்கிறது. வண் ணார் முதல் வேடர் வரை. அந்தணர் முதல் ஆதிதிராவிடர் வரை. ஆழ்வார்களி லும் பல சாதிகள் பிரதிநிதித்துவம் இருந்ததே தவிர, சமத்துவத்தை நிலைநிறுத்த பக்தி இலக்கியங்களின் பங்கு என்ன என்று கணக்கிட்டால் சொற்பத்திலும் சொற்பம்.

**உண்ணாமலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்;**

**பெண் ஆகிய பெருமான், மலை திருமா மணி திகழ;**

**மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவு அதிரும்;**

**அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே.**

என்று திருவண்ணாமலையில் இருக் கும் சிவனைப் பார்த்து பாடினார்களே தவிர, வினை அறுந்தா, பசி ஒழிந்தா என்று யாரும் கேட்கவில்லை;

**உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்;**

**மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்;**

**அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்;**

**துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே!**

என்று ஆழ்வார்கள் பாடினார்களே தவிர துயர் அறுந்தா என்று பார்க்கவில்லை.

எனவே சைவமோ வைணவமோ மக் களின் பசியை நோயை நீக்கவில்லை; இவ் வுலக வாழ்க்கைக்கு தீர்வு தரவில்லை. இன்னொரு உலகத்தை வலியுறுத்திய சம யங்கள் அவை. எனவே சைவமோ வைணவமோ இங்கே இருந்த சமயங்கள் எதையும் வள்ளலார் தனது 6வது திருமறை யில் ஒப்புக் கொள்ளவில்லை.

அதேபோல வேதாந்தம் சித்தாந்தம் என்கின்ற 'மதம்' இருக்கிறதே, அதுதான் மதம் பிடித்தது. அதையும் விட்டு ஒழியுங் கள் என்று சொன்னார். அப்படி சொன்ன வள்ளலாருக்கு சொல்ல வேண்டிய தேவை என்ன இருந்தது? பசிப்பிணியை போக்க வேண்டிய அவசியம் என்ன இருந்தது? இப்போது இந்த 200 வருடங்களுக்குப் பின் அன்றைக்கு சமூகம், நாடு எப்படி இருந்தது என்று ஆராயுங்கள்.

அதற்குப் பிறகு பெரியார் வந்தார். அதற் குப் பிறகு அம்பேத்கர் வந்தார். பெரியார் என்ன சொன்னார்? இந்த மண்ணில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட வர்களுக்கும், சூத்திரர்களும் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கும் தற்குறித் தனத்திற்கும், ஏழ்மைக்கும் வறுமைக்கும் காரணம் இங்கே இருக்கும் சாதியும், மத மும் அதனால் அதனை ஒழிக்கிறேன் என் றார். ஏன் உங்கள் தாத்தா படிக்க வில்லை. என் தாத்தா படிக்கவில்லை. ஐ.பி. செந்தில் சட்டமன்ற உறுப்பினர், அவருடைய முன் னோர்களுக்கு ஏகப்பட்ட நிலம் இருந்திருக் கும்; பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம்.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

# ‘சாதி, சமயத்தை ஒழித்து அருட்பெருஞ்ஜோதியைக் கண்டேன்’ என பிரகடனப் படுத்தியவர்!

## ஆ.இராசா எம்.பி. பேச்சு... 4-ஆம் பக்கத் தொடர்ச்சி

முதலியார், தேவர், ரெட்டியார் என்று எல்லோரும் தங்களை மிட்டா மிராசுகளாக பெருமிதம் கொண்டார்கள்; 200 ஏக்கர், 300 ஏக்கர் நிலம் இருந்தது.

ஆனால் அவர்களுக்கு கல்வி இருந்ததா என்றால் இல்லை. அவர்கள் தலைவர்களாக இருக்க மதம் அனுமதித்தது; அறிவுள்ளவர்களாக ஆக தடை போட்டது. படிக்காதே என்று மதம் உத்தரவு போட்டது. அப்படியானால் கல்வி மறுக்கப்பட்ட ஒரு சமூகத்தை உருவாக்கியது எது? வேதாந்தம் சித்தாந்தம் என்ற வைதிக மதம். அதை வழிமொழிந்தது எது? கல்வி மறுக்கப்பட்ட சமூகத்தில் படிப்பு மறுக்கப்பட்ட சமுதாயத்தில் அறிவைப் பெறுவதில் தடை ஏற்பட்ட சமூகத்தில் - நம்முடைய சமயநெறிகள் என்று வள்ளலாரால் உணரப்பட்ட சைவம், வைணவம்; பின்னிட்ட அனைத்து வழிபாட்டு முறைகளும் அந்த வைதீகத்தால் உள்ளடக்கப்பட்டு ‘இந்து மதம்’ என்று பின்னாளில் உருவம் தரப்பட்ட நம்முடைய மதம்!. அதனால் ஏற்பட்ட வறுமை. அந்த வறுமையின் காரணமாக பட்டினி.

இதை வள்ளலார் உணர்ந்திருக்கிறார். சாதீய கட்டுமானத்தின் நீட்சியாக வறுமையை, பசியை கண்டுணர்ந்தவர் வள்ளலார். அம்பேத்கர் தெளிவாக சொன்னார், “இந்து மதத்தின் பெயரால் பிராமணர்கள் இங்கே என்ன செய்திருக்கிறார்கள் என்றால், தாங்கள் மட்டும் கல்வியும் அறிவும் உள்ள ஜாதியாக இருந்து கொண்டு, ஏனைய சாதிகளை தற்குறிகளாக, கல்வி அறிவற்றவர்களாக, வறுமையில் வைத்திருப்பதற்கு மதத்தின் பெயரால் ஒரு தத்துவத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தத்துவம் உலகத்தில் வேறு எங்கும் இல்லை. பிராமணீயம் கண்டுபிடித்ததுதான்” என்று குற்றம் சாட்டினார். அதைத்தான் பெரியார் சொன்னார், “இங்கே கல்வி அறிவு இல்லாமல், அறியாமையிலும், வறுமையிலும் பெரும்பான்மை மக்களாக இருக்கும் சூத்திரர்களாக, பஞ்சமர்களாக திகழ்வதற்கு காரணம் ஜாதியும், மதமும் அதை ஒழிக்க வேண்டும்” என்று சொன்னார். அப்படியானால் ஜாதியும், மதமும் இங்கே அறியாமையும், வறுமையும் தந்தது. அதனால் பசிப்பிணி, வறுமை, அறியாமை இந்த சமூகத்தை ஆன்மிகத்தில்கூட தெளிவு பெறாமல் இருளில் அடைத்து வைத்திருந்தது.

### வள்ளலார் அறிவித்த மாற்றுப் பாதை!

நான்கு வேதம் எனக்கு தெரியாது. இங்கே இருக்கின்ற பெரும்பாலான மக்களுக்கு வேதம் தெரியாது. சித்தாந்தம் தெரியாது.

ஏன் சைவ சித்தாந்தமே தெரியாது. நாம் எல்லோரும் சிவன் கோவிலுக்கு சென்று கொண்டிருக்கிறோம்; ஆனால் சைவ சித்தாந்தம் என்றால் என்ன என்று தெரியுமா? பதி, பசு, பாசம் என்று மெய்கண்ட தேவர் சிவஞான போதத்தில் சொன்னார். இந்த சிவஞான போதத்தை படித்துவிட்டுத்தான் நாம் சிவனை வணங்குகிறோமா என்றால்; இல்லை. அந்த முரண்பாட்டை தீர்ப்பது எது? வைணவத்தில் என்ன சொன்னார்கள், நாங்கள் உண்மையை சொன்னால் இன்றைக்கு மதத்தை விமர்சிக்கிறார் ராஜா என்று ஆர்ப்பாட்டம்!. வைதீகர்களுக்கு நான் கேட்கிற கேள்வி. நீங்கள் ஒரு தெளிவுற்ற முடிவுக்கு வந்துவிட்டீர்களா? வள்ளலார் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்.

அருட்பெருஞ்ஜோதி, தனிப்பெருங்கருணை என்று சொல்லிவிட்டார். ஜாதி சமய சலக்கை ஒழித்தேன், அருட்பெருஞ்ஜோதியை கண்டேன் என்று பிரகடனப்படுத்தினார் வள்ளலார்.

ஜாதியை, மதத்தை ஒழித்து விட்டு வெளியே வந்தீர்கள் என்றால், எல்லா ஆசாரங்களையும் விட்டு ஒழித்துவிட்டால், கடவுளை காட்டுவதற்கு வழி இருக்கிறது என்ற ஒரு மாற்று பாதையையே வள்ளலார் தேர்ந்தெடுத்து அறிவித்தார். ‘சைவம் வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் இலட்சியம் வைக்க வேண்டாம். அவை அற்ப பிரயோஜனம் கொண்டவை’ என்று தெளிவுபடுத்திய வள்ளலார்;

**“ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரோ**

**ஓர்மை உள் ஆகி உலகியல் நடத்த வேண்டும்”**

என்று இந்த சமூகத்திற்கு உத்தரவு போட்டவர்; அந்த உத்தரவோடு அவர் நிறுத்தவில்லை; அந்த உலகியல் நடையில் “கருணை என்ற ஒரே சாதனத்தால் மட்டுமே கடவுளை அடைந்து இறையருள் பெறலாம்” என்று எல்லையையும் தீர்மானிக்கிறார்.

### மதக் குழப்பங்கள்!

ஆனால் இன்றைக்கு வரைக்கும் வைணவமோ சைவமோ தெளிவாக எதை முன் வைக்கிறது. அத்வைதத்தை கொடுத்தது யார்? சங்கரர். அவருக்கு அடுத்து வந்தது யார்? மத்வாச்சாரி; அவருக்கு பின்னால் இராமானுஜர். விசிஷ்டாத்வைதம் ஒரு தத்துவம்; பிறகு துவைதம். அப்படியானால் அத்வைதம் தவறு என்பதற்காக துவைதம் வந்ததா?. துவைதம் தவறு என்பதற்காகப் பிறகு விசிஷ்டாத் வைதம் வந்ததா?. ஒன்று உயிரும் கடவுளும் ஒன்று என்று சொல்கிறது. பரமாத்மாவும், ஜீமாத்மாவும் ஒன்று என்று சொன்னால் ஒரு தத்துவம். இரண்டும் வெவ்வேறு என்று சொன்னால் வேறு தத்துவம். சில நேரங்களில் ஒன்றாக இருக்கும், சில நேரங்களில் வேறாக இருக்கும் என்றால் வேறொரு தத்துவம். எனவே அத்வைதம் முடிவா? துவைதம் முடிவா? விசிஷ்டாத் வைதம் முடிவா? ராமானுஜர் சரியா? மத்வாச்சாரியார் சரியா? சங்கராச்சாரி சரியா? இதற்கு அவர்களே இன்னும் முடிவு காணவில்லை. மத குழப்பங்கள் எந்த மதமாக இருந்தாலும், வள்ளலார் சொல்லுகிற சமயம் என்று சொல்கின்ற வைணவமாக இருந்தாலும், சைவமாக இருந்தாலும், வள்ளலார் சொல்லுகின்ற மதம் என்று சொல்லுகின்ற வேதாந்தமாக சித்தாந்தமாக இருந்தாலும் எதுவும் முடிவில்லாமல் தெளிவில்லாமல் இருந்த தத்துவத்தில் திளைத்திருந்த வள்ளலார் ஒரு தெளிவை நோக்கி வருவதற்கு காரணம் வறுமையும், தற்குறித் தன்மையும் இங்கே திணிக்கப்பட்ட காரணத்தை அவர் அறிய முற்பட்டதால்தான். இப்போது அவர் அறுக்க விரும்பிய வறுமையை பசிப்பிணியைவெறுத்து ஒதுக்கிய சாதி மத வேறுபாட்டைஇரண்டையும் இணைத்துப் பாருங்கள். வள்ளலார் காட்டிய அந்த தனிநெறிதனிப் பெருங்கருணை சாதி ஒழிப்பில்தான் மையம் கொள்கிறது.

பெரியார் எதையும் காரணம் இல்லாமல் தொட மாட்டார், எதையும் காரணம் இல்லாமல் விமர்சிக்க மாட்டார், எதையும் காரணம் இல்லாமல் புகழவும் மாட்டார். எனக்கு என்ன ஆச்சரியம் என்றால், ரஷ்யாவுக்கு சென்று வந்த பெரியார் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை (Manifesto of Communist Party) தமிழில் மொழிபெயர்த்து குடியரசில் வெளியிட்டார். எது கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை? “இந்த உலகத்தை பல தத்துவ வாதிகள் விளக்கி இருக்கிறார்கள், வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். ஆனால் பிரச்சினை இந்த உலகத்தை எப்படி மாற்றுவது என்பதுதான்” என்றார் மார்க்ஸ். அதற்காகத்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை. அதனுடைய கடைசி வரி என்ன சொல்கிறது, “உலகத் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள். இழப்பதற்கு உங்களிடத்தில் ஒன்றும் இல்லை; உங்கள் அடிமைச் சங்கிலியைத் தவிர” (Workers of the world unite; you have nothing to loose but your chains). அப்போது இந்த கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை தமிழில் கொண்டு வர வேண்டிய அவசியம் பெரியாருக்கு ஏன் வந்தது என்றால், பொதுவுடமை தத்துவம் அவருக்கு பிடித்திருந்தது. ஆனால் அந்த தத்துவத்தை இந்த மண்ணில் நேரடியாக நிறைவேற்ற முடியாது என்று கருதினார். ரஷ்யாவில் இருந்து வந்ததும் பெரியாரிடம் கேட்டார்கள், ‘கம்யூனிசத்தை எப்படி புரிந்து கொண்டீர்கள்? என்று. அவர் பொருள் முதல் வாதம் (Meterialism) எல்லாம் படிக்கவில்லை. பொருள் முதல் வாதம், எண்ண முதல் வாதம், எது உற்பத்தி? எது உற்பத்தி சாதனம்? இது ஒரு பெரிய அறிவியல் மாதிரி படிக்க வேண்டும். ஆனால் பெரியார் எளிமையாக தெளிவாக சொன்னார், ‘உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் சுகாதாரம், முதுமையில் பாதுகாப்பு இந்த ஆறும் இருந்தால் அதுதான் கம்யூனிசம் என்றார். மார்க்ஸ் சொன்னதுபோல இந்த சமூகம் மாற வேண்டும். தத்துவ ஆசிரியர்கள் இந்த உலகத்தை பற்றி விளக்கி விளக்கி பேசுகிறார்களே தவிர, இதை மாற்ற முன்வரவில்லை. அந்த வகையில் மார்க்சீயத்தை பெரியார் ஏற்றார். ஆனால், மதமும் சாதியும் இறுகி படிந்த இந்த நாட்டில் அதை நேரடியாக நிறைவேற்ற முடியாது என்று உணர்ந்தார். அதேப்போல ‘சாதியை ஒழிக்க வழி’ என்ற நூலினை அம்பேத்கர் எழுதினார். அந்த புத்தகத்தையும் கண்டுபிடித்து தமிழில் கொண்டு வந்து குடியரசில் - வெளியிட்டவர் தந்தை பெரியார்தான்!. ஆக, வர்க்கம் ஒழிய வேண்டும் பெரியார் விரும்பினார். புத்தகம் போட்டார். ஜாதி ஒழிய வேண்டும் என்று அம்பேத்கர் அன்று ஆங்கிலத்தில் புத்தகம் எழுதினார். அந்த புத்தகத்தை தமிழிலே கொண்டு வந்து பரப்பினார்.

### பெரியார் பிரசுரித்த ஆறாவது திருமுறை!

வர்க்க ஒழிப்பிற்கு மார்க்ஸை ஏற்ற பெரியாரை - வருண சாதி ஒழிப்பிற்கு அம்பேத்கரை பரப்பிய பெரியாரை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது; அதுதான் அவர் உயிர் மூச்சு. ஆனால் வள்ளலாரின் ஆறாவது திருமந்திரத்தை ஏன் பெரியார் குடியரசில் பிரசுரித்தார்? அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை என்று ஆராதனை செய்த வள்ளலார், எப்படிகுடியரசில் இடம் பெற்றார். ஏதோ ஒரு சங்கிலித் தொடர் இருந்தால் ஒழிய பெரியார் அதை செய்திருக்க மாட்டார். ராமலிங்க அடிகளார் என்ன சொல்லுகிறார் என்றால், “இருக்கின்ற எந்த கடவுளையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. சிவன், விஷ்ணு எந்த கடவுளும் எனக்கு சம்மந்தமில்லை. சுத்த சமய சன்மார்க்க சங்கம் என்பது ஒரு மதத்திற்காக அல்ல. கிறிஸ்தவர்களும் சேரலாம், இஸ்லாமியர்களும் சேரலாம். ஏனென்றால் நான் ஜோதி வடிவத்தில் இறையை பார்க்கிறேன். நான் பார்ப்பதெல்லாம் கருணை, எல்லா உயிர்கள் மீதும் கருணை, இறைவன் மீது பற்று அன்பு, பசியில்லாத உலகம், பரஸ்பர நட்பு, ஜீவ காருண்யம் இவ்வளவுதான்” என்று!.

இருக்கின்ற எல்லாவற்றையும் பெரியார் கருத்தியலாக உடைத்தார். நான் நாச வேலைக்காரன், நான் அழிவு வேலைக்காரன் என்று அவரே தன்னை சொல்லிக் கொண்டார். இருக்கின்ற சமூக அமைப்பை உடைத்துவிட வேண்டும் என்று மட்டும் விரும்பியவர் பெரியார். அம்பேத்கர் என்ன செய்தார்? இருக்கின்ற அமைப்பு வேண்டாம் என்று நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் மதம் என்பது மக்களை இணைக்கின்ற ஒரு விசையாக இருக்க வேண்டும் (Religion as a social force). அதற்கு ஒரு மதம் தேவை என்று நான் உணர்கிறேன் என்றார். அம்பேத்கரின் கல்வி தளம் என்பது நீண்ட தளம். அவர் வாசிக்காத துறையே இல்லை. அவர் ஒரு பொருளியல் நிபுணர். அவரை, நிதி குறித்த அமைச்சரவைக் குழுவில் சேர்க்கவில்லை. அதையும் ஒரு காரணமாக வைத்துத்தான் தன் பதவியை இராஜினாமா செய்தார். அப்போது அம்பேத்கர் சொன்னார், “இந்தியாவில், வெளிநாட்டில் சென்று முதன் முதலாக பிஎச்.டி - பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் படித்து வந்தவன் நான்தான். என்னை ஏன் சேர்க்கவில்லை?” என்று கேட்டார். ஒரு பொருளியல்வாதி, அரசியல் விற்பன்னர், சட்ட மேதை, இந்த சமூகத்தை பற்றி சாதியை பற்றி ஆய்வு செய்தவர் எல்லா தளங்களிலும் அவர் இருக்கிறார். ஆனால் அவர் பௌத்தத்தை தழுவினார். ஒன்றை அழித்துவிட்டு அந்த இடத்தில் வெறுமை கூடாது என்று இன்னொன்றை வைத்தார். அதனால் சமத்துவம் போதித்த, கடவுளைப் பற்றி அக்கறை கொள்ளாத பவுத்தம் தழுவினார் அம்பேத்கர். பெரியார் என்ன சொன்னார், “நீங்கள் பவுத்தம் செல்லுங்கள். ஆனால் ஒன்று, நீங்கள் தனியாக செல்லாதீர்கள்; பல லட்சம் பேரோடு செல்லுங்கள். எனக்கு இருக்கும் பிரச்சினை என்ன என்று கேட்டால், இந்த பிராமணிய மதம் என்பதும், இந்து மதம் என்பதும் உங்களையும் சேர்த்து சுவீகரித்துவிடும், செரித்துவிடும் என்கின்ற அச்சம் எனக்கு இருக்கிறது“ என்றார். 1948 அரசியல் நிர்ணய சபையில் இந்து சட்ட மசோதாவை அம்பேத்கர் கொண்டு வருகிறார். அதுவரையில் இந்துக்கு சட்டம் இல்லை. அதற்கு முன்பு இருந்த சட்டம் எல்லாம் சாஸ்திரம், சம்பிரதாயம், மனுஸ்மிருதி, உள்ளிட்ட தர்மங்கள் இருந்தன. அந்த தர்மங்கள்தான் இந்துக்களுக்கு பொருந்தும். இந்து சட்டம் என்று தனியாக ஒன்று இல்லை. அப்போது இந்து சட்ட மசோதாவை அம்பேத்கர் கொண்டு வருகிறபோது, சியாமளா பிரசாத் இந்து மகா சபையின் தலைவர், நேரு அமைச்சரவையில் ஒரு அமைச்சராக இருக்கிறார். அவரும் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருக்கிறார். இந்த இந்து சட்ட மசோதா வரும்போது ஷியாமளா பிரசாத் பேசுகிறார், “நீங்கள் எதற்கு புதிதாக ஒரு சட்டத்தை கொண்டு வருகிறீர்கள். ஏற்கனவே நம்மிடம் சம்பிரதாயம் இருக்கிறது, சாஸ்திரம் இருக்கிறது. ஸ்மிருதி இருக்கிறது, சுருதி இருக்கிறது. அதிலே குறைபாடுகள் இருந்தால் திருத்திக் கொள்ளலாம். தேவை என்றால் நடைமுறையை மாற்றிக் கொள்ளலாம்; மாறிக் கொள்ளலாம்.

இந்து மதம் எல்லாவற்றையும் ஈர்த்துக் கொள்கின்ற தன்னகத்தே வாங்கிக் கொள்கின்ற சகிப்புத் தன்மை கொண்ட ஒரு அற்புதமான மதம். அந்த மதத்திற்கு புதிய சட்டம் தேவை இல்லை. நீங்கள் என்ன மாறுதலை விரும்புகிறீர்களோ அதை நடைமுறைப்படுத்திவிடலாம்” என்று சொல்கிறார். அம்பேத்கர் சொல்கிறார், “Yes, I do admit; இந்து மதம் எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளும். அதற்கு மாறுபட்ட இறையியல் கோட்பாடுகளைக் கூட உள்வாங்கி கொள்ளும். ஆனால் என்ன பிரச்சினை என்றால், பவுத்தத்தை ஏற்றுக் கொண்டீர்கள். புத்தரை 10 அவதாரங்களில் ஒரு அவதாரமாக மாற்றினீர்கள். எல்லாவற்றையும் இந்து மதம் எடுத்துக் கொண்டது. பெருந்தன்மையான மதம்தான். எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு சேர்த்துக் கொள்ளும் அந்த மதம் ஒன்றை மட்டும் ஒப்புக் கொள்ளாது. அது equality என்ற சமத்துவம். சமத்துவத்தை ஒருபோதும் உங்கள் மதம் ஏற்றுக் கொள்ளாது” என்று! நான் பேசவில்லை; அம்பேத்கர் அரசியல் நிர்ணய சபையில் பேசியது ஆவணமாக இருக்கிறது. அம்பேத்கர் மேலும் சொல்கிறார்.

பவுத்தத்தை ஏற்றுக் கொண்டீர்கள். பவுத்தத்தின் அகிம்சையை ஏற்றுக் கொண்டீர்கள். ஆனால் பௌத்தம் சொன்ன சமத்துவத்தை மட்டும் இன்றைய தேதி வரை நீங்கள் ஏற்றுக் கொள்ளாததற்கு என்ன காரணம்? எனவே உங்களுடைய மதம் எந்த மதத்தையும் ஏற்றுக் கொள்ளும், ஆனால் சமத்துவத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. புத்தர் சொன்ன அகிம்சை, கொல்லாமை எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்ட மதம் சமத்துவத்தை மட்டும் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு என்னக் காரணம். சமத்துவத்திற்கு எதிராக கட்டப்பட்ட சமூக அமைப்பை இந்து மதம் அடிப்படையாகக் கொண்டது. எனவேதான் இந்துக்களுக்கு சட்டம் தேவைப்படுகிறது என்று அம்பேத்கர் அந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தார். பின்னாளில் அவை சட்டங்களாக நேருவால் கொண்டு வரப்பட்டது.

### சுத்த சன்மார்க்க சங்கம்!

ஆக, பெரியார் என்ன செய்தாரோ, அம்பேத்கார் என்ன செய்தாரோ அவற்றை நீங்கள் வள்ளலாரோடு பொருத்திப் பார்த்தால், அறியாமையையும் வறுமையையும் அவர் எதிர்த்து நின்று போராடியபோது, அதற்கு இந்த மண்ணில் இருக்கின்ற எந்த தெய்வமும், எந்த மதமும், எந்த சடங்குகளும், எந்த பிரிவினைகளும், எந்த தத்துவமும், எந்த இறையியல் தத்துவமும் ஒத்து வராது. இந்த மண்ணில் அறியாமையும், வறுமையும் ஒழிய வேண்டும் என்றால், இங்கு இருக்கும் எந்த இறை தத்துவமும் இந்த மக்களை காப்பாற்றாது. ஒழிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக தெளிந்து தன் வழியை, மார்க்கத்தை கட்டமைத்து ‘சுத்த சன்மார்க்க சங்கத்தை’ ஏற்படுத்தினார் என்ற முடிவுக்கு நாம் வரமுடியும். இன்னும் சொல்லப்போனால், வள்ளலார் தொடாத துறையே இல்லை. திருக்குறளுக்கு மாநாடு நடத்தினார் பெரியார். ஆனால் பின்னாளில் திருக்குறளை பரப்ப வேண்டும் என்று முடிவு செய்து, திருக்குறளை பரப்பியவர். ஆனால் அதற்கு முன்பே தினந்தோறும் திருக்குறளை தனது சபையில் எழுதி வைத்தவர் வள்ளலார். அதைப் படிக்கச் சொன்னவர் வள்ளலார். அதை விட பெண்கள் படிக்க வேண்டும் என்று விரும்பியவர் வள்ளலார். இதெல்லாம் பெரியாருக்கு முன்பே செய்துவிட்டார். எல்லாவற்றையும் விட அரசாங்கத்தின் சர்வாதிகாரத்தை தட்டி கேட்டு எழுதியவர் வள்ளலார்.

### பொருளியல் தளத்தில் வள்ளலார்!

எனவே வள்ளலாரை சமூகத்தளத்தோடு நிறுத்தி விட முடியாது. பொருளியல் தளத்திலும் இருக்கிறார். ஏனென்றால் பசி ஒழிய வேண்டும், வறுமை ஒழிய வேண்டும் என்று விரும்பினார். அப்போது வறுமை ஒழிய வேண்டும், பசி ஒழிய வேண்டும் என்று விரும்பினால் இரண்டு தளம் ஒன்று சமூகத் தளம், இன்னொன்று பொருளியல் தளம். எல்லோருக்கும் எல்லாம் சென்று சேர வேண்டும் என்பதுதான் வள்ளலாரின் தத்துவமும். அதற்கான இறை தத்துவமாகத்தான் ஒரே ஒரு இறைவனைக் கொண்டு வருகிறார். அந்த சங்கத்திற்கு சபைக்கு தெளிவான கட்டுப்பாடுகள் எல்லாம் கொண்டு வருகிறார். எனக்கு தெரிந்து ஒரு ஆன்மிகவாதி ஒரு இயக்கம் கொண்டு வந்து, நெறி சொல்வது என்பது வேறு. அந்த நெறியை பரப்ப ஒரு சங்கத்தை நிறுவனமாக மாற்றியவர் நம்முடைய வள்ளலார். சங்கத்திற்கு ஒழுக்க விதிகளை கட்டமைத்து அதை கடைபிடிக்க வலியுறுத்திய ஆன்மிக செம்மலும் அவர்தான்.

தன்னுடைய கொள்கை, “ஜாதிசமய வழக்கை ஒழித்தேன், அருட்பெருஞ்ஜோதியை கண்டேன்” என்பது; ஜாதி வேண்டாம், மதம் வேண்டாம் என்று சொன்னவர்; எந்த ஆசாரமும் வேண்டாம் என்கிறார். எத்தனை ஆசாரங்கள்? அவர் சொல்கிற ஆசாரத்தை பாருங்கள். அவருக்கு வேண்டியதெல்லாம் அன்பு. அன்புக்கு அடிப்படை எது? தயை; தயைக்கு தடை என்று எதை சொல்கிறார்? ஆசாரங்களை சொல்கிறார் “ஜாதி ஆசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமையாசாரம், மதாசாரம், மரபு ஆசாரம், சாதனா சாரம், அந்த சாரம், சாஸ்திரா சாரம் முதலிய ஆசாரங்கள்; ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து சுத்த சன்மார்க்க சத்ய ஞான ஆசிரமத்தை வணங்கி பொதுநோக்கம் வந்தால் ஒழிய தயவு விருத்தி ஆகாது. தயவு விருத்தி ஆகாவிட்டால் அன்பும், கருணையும் கிடைக்காது. அன்பும், கருணையும் இல்லாவிட்டால் நீ இறைவனை அடைய முடியாது” என்று சொல்கிறார் வள்ளலார். நாம் தவறு செய்தோம் என்றால் அதனை தவறு என்று ஒப்புக்கொள்ள வேண்டும். அது பெரியாரிடம் இருந்தது. பெரிய பெரிய தலைவர்களிடம் எல்லாம் இருந்தது. இந்து மௌடீகம் பேசுகின்ற மதவாதிகள் மட்டும்தான் எதையும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். புதிது புதிதாக விளக்கம் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இத்தனை நாட்களாக ஏன் சைவத்தை தூக்கி பிடித்தீர்கள் என்று கேட்டபோது வள்ளலார் சொன்னார், “அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போது இருந்தது என்றால், அப்போது எனக்கு அவ்வளவு ‘சொற்ப அறிவு’ தான் இருந்தது என்று!.

நான் ஏன் சைவ மதத்தில் இருந்தேன் என்றால், நான் ஏன் சிவனைத் தூக்கி பிடித்தேன், நான் ஏன் விபூதி அணிந்து கொண்டேன் என்றால், ஏன் மெய் கண்ட தெய்வத்தின் சிந்தத்தை ஏற்றுக் கொண்டேன்? பசி, பதி, பாசமெல்லாம் ஏன் ஒரு காலத்தில் நம்பினேன்? என்ன காரணம் என்றால், அப்போது இருந்த அறிவு, ‘சொற்ப அறிவு’ என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார். அப்போது மனிதன் என்பவன் மாறுதலுக்கு உட்பட்டவன். அந்த மாறுதலை ஒப்புக் கொண்டு ஒரு பெரிய பொருளுக்கு வள்ளலார் வருகிறார். பரம்பொருள் என்றால் ஜோதி வடிவில் இருக்கிறது என்று கருதினார். அவர் ஒரு இலக்கியவாதி என்பதை தன் எழுத்தில் நிரூபித்திருக்கிறார் “மனு நீதி கண்ட முறை” என்ற நூலில் மனுநீதி சோழனின் தேர் காலில் இட்டுக் கொன்றப்பட்ட பசுவிற்காக அவன் பேசுவது மாதிரி அவர் எழுதிய மனுநீதி கண்ட முறை என்ற அந்த உரையில் என்ன சொல்கிறார் என்றால்,

**“தானம் கொடுப்போரை தடுத்து நின்றேனோ**

**தர்மம் பாராது தண்டம் செய்தேனோ**

**களவு செய்தவருக்கு உளவு சொன்னேனோ**

**கோள் சொல்லி குடும்பம் கலைத்தேனோ”**

என்று அன்றைக்கு அறமென கருதப்பட்டவையெல்லாம் பட்டியலிட்டு சொல்லிக் கொண்டே போகிறார். இதை சொல்லிக் கொண்டே போகும்போது, வள்ளலார் இடத்தில் இருக்கும் இந்த தமிழும், இலக்கியமும் வெளியே வந்து விழுகிறது. அப்போது அவர் சைவ சமயத்தில் இருந்தார். இப்படியெல்லாம் பேசிய, எழுதிய ஒருவர்தான் பிறகு அவற்றையெல்லாம் விட்டுவிட்டு சமூகத்தில் பொருளியலில் இப்படிப்பட்ட மாற்றங்களை செய்து இருக்கிறார் என்றால், இன்றைக்கு 200 வருடங்கள் ஆகிவிட்டது. அவருடைய பணியில் அன்றைக்கு இருந்த ஆட்சியாளரை கண்டித்தார். வறுமையை போக்க வேண்டும் என்று விரும்பினார். அறியாமையை போக்க வேண்டும் என்று விரும்பினார். அறியாமையையும், வறுமையையும் இங்கு நிலைப்படுத்திய விசைகள் இரண்டே இரண்டு. ஒன்று ஜாதி, மற்றொன்று மத ஆசாரங்கள். அதை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்று விரும்பினார். தனக்கென்று ஒரு தனி வழி என்றார். அந்த தனி வழிக்கு ஒரு நிறுவனத்தை கட்டமைத்தார். அந்த தனி வழிக்கு ஒரு சபையை உண்டாக்கினார். அந்த சபைக்கு ஒரு கொடியை கொண்டு வந்தார். தன்னுடைய நெறிக்கு ஆட்களை சேர்த்து ஒரு சங்கமாக மாற்றினார். கல்வியறிவு மறுக்கப்பட்டதை அவர் உணர்ந்து அனைவருக்குமான கல்வி பரப்பலை முன்னெடுத்தார்.

இப்போது நான் என்ன கேட்கிறேன், இவற்றையெல்லாம் ஏற்கனவே செய்தவர் பெரியார். இந்த உலகம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று விரும்பியவர் மார்க்ஸ். இந்த சமூக அமைப்பு மாற வேண்டும் என்று விரும்பி பவுத்தத்திற்கு போனவர் அம்பேத்கர். இன்னும் ஒரு படி மேலே சொன்னால், அம்பேத்கர் ஆன்மிகத் தேடலுக்காக எல்லா மதத்திற்கு உள்ளும் சென்று ஆய்வு செய்தார்.

எம்.சி.சாக்லா சுதந்திர இந்தியாவின் முதல் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர். ஒரு இஸ்லாமியர். அவர் ஜின்னாவின் நண்பர். தனது நண்பரிடம் சென்று கேட்கிறார், “பாகிஸ்தானை பிரிக்க வேண்டாம். உனக்கும் எனக்கும் தேச பக்தி இருக்கிறது. நாம் இங்கேயே இருக்கலாம்” என்கிறார். அதற்கு ஜின்னா “இல்லை சாக்லா, நீ என்னோடு வந்துவிடு. நாமெல்லாம் முஸ்லிம். இந்த இந்து மதவாதிகளை நம்பி, காந்தியின் ராமராஜ்ஜியத்தை ஏற்க முடியாது” என்று அவர் அழைக்கிறார். அவரிடம் கேட்டபோது, அவருடைய ‘ரோசஸ் இன் டிசம்பர்’ (Roses in December) என்ற புத்தகத்தில் எழுதினார்; இஸ்லாத்தில் இணைய கள ஆய்வுகளை கருத்தாய்வுகளை மேற்கொண்டவர் அம்பேத்கர் என்று. ஐநா சபை சென்று காஷ்மீர் எங்களோடு தான் இருக்க வேண்டும் என்று இந்திய அரசின் சார்பில் பேசி விட்டு வெற்றி பெற்று வந்தவர் எம். சி. சாக்லா. அப்போது இந்தியாவோடு காஷ்மீர் இருக்க வேண்டும் என்று விரும்பிய எம்.சி.சாக்லா இஸ்லாத்திற்கு வருகிறீர்களா என்று எம்.சி.சாக்லா அம்பேத்கரிடம் கேட்டபோது, இஸ்லாம் மதத்தைப் பற்றி ஒரு மிகப்பெரிய சிலாகிப்பு, ஒரு உரையாடல் நடந்திருக்கிறது. பிறகு கிறிஸ்துவத்தை படித்திருக்கிறார். இவற்றையெல்லாம் தாண்டி அவர் பவுத்தத்தை தழுவினார். அதற்கு ஒரே காரணம் பெரியார் விரும்பிய வருண ஒழிப்பும், மார்க்ஸ் விரும்பிய வர்க்க ஒழிப்பும் கூடிய ஆன்மிகம் புத்தரிடத்தில் இருந்ததாக அவர் கண்டறிந்தார்.

### புத்தரை சுவீகரித்த இந்துமதம்!

எனவே, இருக்கிற அமைப்பு மதமாக இருந்தாலும், ஜாதியாக இருந்தாலும் அது மாற்றப்பட அல்லது அழிக்கப்பட வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பினார். மாற்றாக புத்தரிடம் சென்றார். புத்தரையும் சேர்த்து சுவீகரித்து கொண்டது இந்து மதம். பெரியார் எல்லாவற்றையும் உடைக்கிறேன் என்றார். ஆனால் அவரால் உடைக்கப்பட்ட வெற்றிடத்தில் ஒரு மாற்றம் கொண்டுவர அவர் பொது ஒழுக்கத்தை மட்டுமே முன் வைத்தார். கம்யூனிசம் இந்த உலகத்தை மாற்றுவோம் என்று சொன்னது. அந்த மாற்றம் நிலைக்கவில்லை. அப்படியானால் கம்யூனிசம் நிலையான வெற்றி பெற முடியாத சூழ்நிலையில் இன்றைக்கு இருக்கிறது. மார்க்சியம் நல்ல தத்துவம். ஆனால் அதற்கு கோர்ப்பசேவ் என்ற தவறான தலைவன் வந்ததால் ரஷ்யாவில் தோற்றுப்போய் விட்டது. பிடல் காஸ்ட்ரோ என்ற ஒரு நல்ல தலைவன் இருந்த காரணத்தினால் அந்த நாட்டில் இன்னும் அதே தத்துவம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அப்போது இப்படிப்பட்ட தத்துவங்களுக்கெல்லாம் குறைபாடு இருக்கிறது, அல்லது நிலைக்க முடியாது என்ற புறச்சூழல் வருகிறபோது நான் எப்படி பார்க்கிறேன் என்றால், பெரியார் இந்த மண்ணில் ஏற்படுத்திய புரட்சி தொடர வேண்டும். ஆனால் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு அந்த இடத்தில் எதை வைப்பது என்று இன்னொரு மதத்தை அல்லது நெறியை அவர் சொல்லவில்லை. கம்யூனிசம் இந்த மண்ணில் மாற்றம் வேண்டும், வர்க்கம் ஒழிய வேண்டும் என்று விரும்பியது. அவர்களும் ஆன்மிக தேடலுக்கு மாற்று சொல்லவில்லை. பவுத்தத்திற்கு சென்றார் அம்பேத்கர். பவுத்தத்தையும் சேர்த்து தனதாக்கி கொண்டு சிதைத்தது இந்து மதம்.

எனவே கருப்பு, சிவப்பு, நீலம் எல்லாம் வெவ்வேறு வழிகளை கையாண்டு சமத்துவத்தை நிறுவ வேண்டும், அறியாமையை, வறுமையை போக்க வேண்டும் என்று விரும்பின. ஆனால் எல்லா இடத்திலும் ஏதோ ஒரு பூரணத்துவம் இல்லாத போதாமை இருக்கிறதோ என்று எண்ண இடமிருக்கிறது; அப்படி எண்ணுவதில் உண்மை இருக்குமானால், அந்த போதாமை நீக்கப்பட ஒரு வழி இருக்கிறது; அது வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க நெறியாக இருக்கலாமா அந்த நெறியை நாம் இப்போது இந்த உணர்வோடு முன் எடுக்க வேண்டுமா என்கின்ற விவாதத்தை இந்த அரங்கம் மூலமாக இடது சாரி சிந்தனையாளர்களுக்கு நான் முன்வைக்கிறேன். நீலமும், சிவப்பும், கருப்பும், வள்ளலாரின் வெள்ளையோடு இணைந்தால் இந்திய அரசியல் தமிழக அரசியல் ஏற்றம் பெறும் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் காவியை விரட்ட வேண்டும் என்று கருப்பு வந்தது. காவியை விரட்ட வேண்டும் என்று நீலம் வந்தது. காவியை சிவப்பு ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் சிவப்பும், நீலமும், கருப்பும் விடுதலைக்கான தத்துவமாக தேவைப்படுகிறது. அந்த தேவைகளில் போதாமை ஏதேனும் உள்ளதா என்று திறந்த மனதோடு தேடினால், வள்ளலாரின் வெண்மையையும் இணைத்தால் முழுமை பெறுமா என்கிற சிந்தனையை நான் முன் வைக்க விரும்புகிறேன்.

### நேர் எதிர் திசையில் இயங்கும் ஆன்மிகம்!

நாம் ஒரு இக்கட்டான சூழ்நிலை கொண்ட அரசியலில் இருக்கிறோம். ஒரு பேராபத்தில் இருக்கிறோம். ஒரு பெரிய விஷப்பாம்பு எதிரே வருகிறது. அந்தப் பாம்பை அடிப்பதற்கு அம்பேத்கர் தடி இருக்கிறது. பெரியாரின் தடியும் பயன்படுகிறது. மார்க்ஸின் தடியும் இருக்கிறது. ஆனாலும் அந்த பாம்பு வேறு ஒரு இடத்தில் சென்று ஒளிந்து கொண்டிருக்கிறது. ஆன்மிகத்தில் மதத்தில் அந்த பாம்பு ஒளிந்து கொண்டு, மக்களை மயக்குகிற இடமான பாசிச ஆன்மிகம், மக்களை பிளவுபடுத்துகிற ஆன்மிகம், சமத்துவத்தை தடுக்கிற ஆன்மிகம், பெண்களை இழிவுபடுத்துகிற ஆன்மிகம், ஒருவனின் தற்குறித்தனத்தை, வறுமையை கர்மாவின் பெயரால் நியாயப்படுத்தும் ஆன்மிகம் ஆகியவற்றில் தன்னை அது ஒளிந்து மறைத்துக் கொள்கிறது. வள்ளலார் முன்னெடுத்த ஆன்மிகம் இவைகளுக்கு நேர் எதிர் திசையில் இயங்குகின்ற ஆன்மிகம். அங்கே விஷப்பாம்பு குடியேறவோ, ஓடி ஒளியவோ வாய்ப்பில்லை.

எனவே, பாசிச ஆன்மிகத்திற்கும் ஒரு மாறுதல் வேண்டும் என்று கருதினால் - அந்த மாறுதல் மார்க்சோடும், அம்பேத்கரோடும், பெரியாரோடும் சேர்க்கப்பட வேண்டுமானால் நாம் வள்ளலாரை இந்த தலைவர்களோடு இணைத்து ஒரு புதிய உத்தியை பாசிச எதிர்ப்புக்கு பயன்படுத்த வேண்டும்.

எனவே, 200 ஆண்டுகளுக்கு பிறகும், பா.ஜ.கவின் பாசிசத்தை வீழ்த்த பெரியாரோடும் மார்க்சோடும், அம்பேத்கரோடும், வள்ளலாரையும் ஏற்றுக் கொண்டு சமத்துவ சமுதாயத்தை படைக்க உறுதி ஏற்போம்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. உரையாற்றினார்.

# கவித்துவமாகவே வாழ்ந்த இலக்கிய வேந்தர் தலைவர் கலைஞர்!

**(தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி ஒவ்வொரு மாதமும் 3ஆம் தேதியன்று பல்வேறு தலைப்புகளில் 'முரசொலி' சிறப்பிதழ் வெளியிட்டு வருகிறது.**
**இதனையொட்டி இம்மாதம் (நவம்பர்) 'கவிஞர்களின் உரைநடையில் கலைஞர்' என்ற தலைப்பில் சிறப்பிதழ் வெளிவருகிறது.**
**இச்சிறப்பிதழுக்காக கவிச்சுடர் கவிதைப் பித்தன் எழுதிய "கவித்துவமாகவே வாழ்ந்த இலக்கிய வேந்தர் தலைவர் கலைஞர்" எனும் கட்டுரையை இங்கே வெளியிட்டுள்ளோம்.)**

தலைவர் கலைஞர் அவர்கள்
நின்றால் பொதுக் கூட்டம்,
நடந்தால் ஊர்வலம்,
பேசினால் மாநாடு! என்று
மதிப்பிற்குரிய அண்ணன் துரைமுருகன் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள்.
தலைவர் கலைஞர் அவர்கள்
உதிர்த்தால் பொன்மொழி,
உரையாடினால் கவிதை,
உரையாற்றினால் காவியம்! என்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பே நான் முரசொலியில் எழுதினேன்.

உண்ணும்போதும், உலவும்போதும், உறங்கும்போதும், எண்ணும்போதும், எழுதும்போதும், இயங்கும்போதும்,
"தமிழ்! தமிழ்" என்றே வாழ்ந்த தலைவர் கலைஞர் அவர்கள்,
கவியரங்குகளில் மட்டுமல்ல!
சகஜமாக மற்றவர்களுடன் உரையாடும் போதும்,
மேடைகளில், சட்டமன்றில், மணவிழா உள்ளிட்ட குடும்ப நிகழ்வுகளில் உரையாற்றும் போதும்,
நாடகம், திரைப்படங்களில் வசனம் எழுதும் போதும், கதை, கட்டுரைகள் வரையும்போதும், முரசொலியில் கடிதங்கள் தீட்டும்போதும்,
ஊடகவியலாளர்களின் உள்நோக்கம் நிறைந்த வினாகணைகளின் முனைமுறிந்து போகும் வண்ணம் பதில் சொல்லும்போதும்,
அவரிடம் வெளிப்படும் வார்த்தைகளும், வாசகங்களும் கவித்துவம் நிறைந்ததாகவே விளங்கும்.

கவிதை என்ற பெயரில் பலர், உரைநடை எழுதிக்கொண்டிருந்த நேரத்தில், உரைநடையையும் கவித்துவமாக எழுதிக் குவித்தவர் தலைவர் கலைஞர். அதனால்தான் கலைஞரின் உரைநடைக்குக்
"கவிவசனம்" என்று பெயர்சூட்டினார் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள்.

18.11. 1983 அன்று, புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் தி.மு.க.செயலாளர், அண்ணன் க.சிதம்பரம் அவர்களின் புதல்வி மாதவி திருமணத்தைக் காலையில் தலைமைதாங்கி நடத்தி முடித்து, மாலையில் பட்டுக்கோட்டை கம்பன் விழாவுக்காகத் தலைவர் கலைஞர் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.
ஐயா மன்னை அவர்களும், அண்ணன் கோ.சி.மணி அவர்களும் வரவேற்று அழைத்துச்செல்லக் காத்திருந்தனர். மாவட்டச் செயலாளர் அண்ணன் பெரியண்ணன், அண்ணன் க.வீரையா, அண்ணன் கீரை. ஆ.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகிகள் தலைவர் அவர்களை வழியனுப்பத்தயாராக
நின்றுகொண்டிருந்தோம். கார் அருகில் வந்த தலைவர் கலைஞர் அவர்கள்,
இருதரப்பினரையும் பார்த்து, அழகிய புன்சிரிப்பை உதிர்த்தவாறே,
"வருபவர்கள் உடன்வரலாம்!
வராதவர்கள் விடைதரலாம்!" என்று
கணீர் என்ற தனது காந்தக்குரலில் வெளிப்படுத்திய வாசகத்தைக் கேட்டு,
சுற்றியிருந்த தோழர்கள் கொட்டி எழுப்பிய கைத்தட்டல் ஓசையும், மகிழ்ச்சி ஆரவார ஒலி முழக்கமும் வானைப்பிளந்தது.

1989 சட்டமன்றத் தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியின் கழக வேட்பாளர் நான்.
தலைவர் அவர்கள் முதற்கட்டத் தேர்தல் பிரச்சாரத்தை முடித்துவிட்டுத் திருச்சியிலிருந்து சென்னை செல்லப் புறப்படும் வேளையில், தொடர்வண்டியில் அமர்ந்திருந்த தலைவர் அருகில் பணிவுடன் சென்று நின்றேன்.
என்னைப் பார்த்து "எவ்வளவு செலவு செய்வாய் தேர்தலில்?"என்று தலைவர் அவர்கள் கேட்டதும்,
"முடிஞ்சவரைக்கும் செய்யுறேன் ஐயா" என்றேன்.. அதாவது செலவு செய்யும் அளவுக்கு வசதி இல்லை என்னும் பொருளில்.
அப்படியே நான் சொன்ன பதிலுக்கு நேர் எதிர்மறைப் பொருளைத் தரும்வண்ணம்,
"அப்படி எவ்வளவுயா முடிஞ்சு வச்சிருக்கே?"
என்று தலைவர் அவர்கள் கேட்டதும், அருகில் இருந்த ஐயா அன்பிலார், அருமை அண்ணன் நேரு அவர்கள் உள்ளிட்ட அனைவரும் சிரித்த சிரிப்பில் அந்த இரயில் பெட்டியே சற்றுக் குலுங்கி நின்றது.



கழக முப்பெரும் விழாக் கவியரங்கம் சென்னையில், கலைவாணர் அரங்கில், தலைவர் கலைஞர் தலைமையில். கவிஞர்களின் கவிதைப் பார்வையனைத்தும், தலைவர் அவர்களின் தலை வழுக்கையிலேயே மையம் கொண்டிருந்தது அந்தக் கவியரங்கில்.
நானும் இப்படிக் கவிதை பொழிந்தேன்.

"நிலைவழுக்கிப் போகாத
தலைவ னே, நீ
நேர்மைக்குச் சிறகடிக்கும்
வானம் பாடி!
தலைவழுக்கை அல்ல!
இது
தினமும் வந்து
தமிழன்னை முகம்பார்க்கும்
நிலைக்கண் ணாடி!"
என்று பாடி முடித்ததும்
பலத்த கரவொலி எழுந்தது.
தலைமை தாங்கியிருந்த தலைவர் அவர்கள், நான் கவிபொழிந்து முடித்த மறுகணமே ஒலி பெருக்கியைப் பிடித்து,

" வண்ணக் கவிஞன்
கவிதைப் பித்தன்
வழுக்கையைப் படம்பிடித்தான்! என்



**கவிச்சுடர் கவிதைப் பித்தன்**

மனதில் இடம் பிடித்தான்!
அன்புத் தம்பி
கவிதைப் பித்தா,
அங்கென்ன வாழ்கிறது?.. உனக்கு
வழுக்கை ஏன்வந்தது?
எண்ணத் தால்,நான்
இளமையோ டுள்ளேன்!
இளநீர் வழுக்கைஇது!
ஏறட்டும் உனக்கும்அது!"
என்று பொழிந்து முடித்ததும், கலைவாணர் அரங்கமே அதிர்ந்துபோகும் வண்ணம் கைத்தட்டல் ஒலியும், சிரிப்பொலியும் கைகோத்துக் கொண்டதை அன்று கண்டு கேட்டு மகிழ்ந்தவர்கள் இன்றும் மறக்க முடியாது.

1996 ஆம் ஆண்டு கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரம்.
ஜெயின் கமிஷன் அறிக்கையில் வரும் சில வாசகங்களை ஆயுதமாகப் பயன் படுத்திக் கொண்டு, இனப்பகைவர்கள், அன்றைக்கு ஓர் அம்மையாரின் தலைமையில், கழக ஆட்சியைக் கவிழ்க்கும் சதியில் ஈடுபட்டிருந்தனர்.
எந்த நேரமும் கழக ஆட்சி கவிழும் என்று சில ஏடு களும் ஜோசியம் சொல்லிக் கொண்டிருந்த அந்த நேரத்தில், கலைவாணர் அரங்கில் கவியரங்கம்.

தன்னேரில்லாத் தமிழ்ப் பெருங்கவிஞர் அண்ணன் மு.மேத்தா அவர்கள் கவிபாட வந்து,

"ஓ..ஜெயின்!
உம்மால் தமிழன்னை நெஞ்சில் பெயின்!
அவள் கண்ணில் ரெயின்!"

என்பன போன்ற வரிகளை வழங்கிச் சென்றார். அடுத்து வந்த நான்,

ஆத்தா நினைத்தவுடன்
அவசரமாய் கலைக்க,இது
கூத்தா நல்லூரா?

கருப்பை என்றால்
கலைத்து விடலாம்! கலைஞர் என்னும்
நெருப்பைக் கலைக்கஒரு
நீர்க்குமிழி துள்ளுவதா?
தருப்பைப் புல்ஒன்று
இமயத்தைத் தள்ளுவதா?
செருப்பைத் தமிழ்மக்கள்
சேகரித்து வைத்துள்ளார்!.. அவர்
விருப்பத்தில் கைவைத்தால்
விபரீதம் உண்டாகும்!"

என்று கனலக்கும் கவிபொழிந்து முடித்தேன்.
கவியரங்கம் முடிந்ததும் கவிஞர்கள் அனைவரும் தலைவர் கலைஞர் அருகில் சென்று நின்றோம்.

" கூத்தாநல்லூர் ஆத்தா பற்றிக்
கவிபாடிய கவிதைப் பித்தா!
எங்கே கவிஞர் மேத்தா?" என்றார் தலைவர்.
பின்னால் நின்றுகொண்டிருந்த அண்ணன் மேத்தா, தலைவர் முன்னால் வந்து நின்றார்.

"மேத்தா! உங்கள் கவிதை இன்று fine !
ஆங்கில வார்த்தைகளைக் கவிதையில் அதிகம் பயன்படுத்தியதால்
உங்கள் மீது போடவேண்டும் fine !" என்று
ஒரு போடு போட்டார். ஒரே ஆங்கில வார்த்தையை இரு பொருள்படத் தலைவர் அவர்கள் கூறியதைக் கேட்ட கவிஞர்கள் மட்டுமல்ல! அருகில் நின்று கொண்டிருந்த அனைவருமே விலாவெடிக்கச் சிரித்து மகிழ்ந்ததை மறக்கவும் முடியுமோ?

ஈழத்தில் இனப்படுகொலை
(Genocide) நடைபெற்ற கொடிய நாட்கள்.
தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் போன்றவர்களின் கண்களைத் துப்பாக்கிகளின் கத்திமுனைகளால் பிடுங்கி எறிந்து, இந்தக் கண்களால் தானே தமிழ்ஈழத்தைக் காணத் துடிக்கின்றீர்கள் என்று சிங்களக் காடையர்கள் கொக்கரித்த நேரம்.
கடலில், படகில் தப்பித்து வந்த இலங்கைத் தமிழர்களைத் துரத்தி வந்து, கடலிலேயே துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்குகின்றன அந்தச் சிங்கள மிருகங்கள்! அந்தக் காட்சியைப் பொதுக்கூட்ட மேடையில் விவரித்துக் கொண்டே வந்த தலைவர் கலைஞர் அவர்கள்,

" படகே அவர்களின்
பாடை ஆனது!
கடலே சுடு காடானது"

என்று சோகம் ததும்பும் நிகழ்வைக் கூட கவிதை நயத்துடன் கூறிய கற்பனை அழகு எவருக்கு வரும்?

1996 தி.மு.க.ஆட்சிப் பொறுப்பில்.அன்றைய தமிழ் மாநிலக் காங்கிரஸ் மூப்பனார் அவர்கள் தலைமையில் கழகக் கூட்டணியில் இடம்பெற்றிருந்த நேரம். கழகத்திற்கும் தமிழ் மாநிலக் காங்கிரசுக்கும் விரிசல் ஏற்படுத்தும் விஷம எண்ணத்துடன் நிருபர் ஒருவர் தலைவர் கலைஞர் அவர்களிடம் பேட்டி ஒன்றில், இப்படிக் கேட்டார்.

"தி மு.க.வுக்கும், த.மா.கா.வுக்கும் இடையில் ஏதோ சிக்கல் இருக்கிறதாமே?"

கண்ணிமைக்கும் கணப்பொழுதில் தலைவர் கலைஞர் சொன்ன பதில் இதோ!

" எனக்குத் தெரிந்து
திருவாரூருக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையில்தான்
" சிக்கல்" இருக்கிறது.
தி.மு.க.வுக்கும்
த.மா.கா.வுக்கும் இடையில் இல்லை!

கேள்வி கேட்ட செய்தியாளர் சிரிப்பு அடங்கவே நெடுநேரம் ஆனது.

வீரன் ஒருமுறைதான்
சாகின்றான்.
கோழை செத்துச் செத்துப் பிழைக்கின்றான் என்பீர்கள்!
ஒரு சிறு திருத்தம்...
வீரன் சாவதே இல்லை!
கோழை வாழ்வதே இல்லை! என்று
எழுதிய தலைவர் கலைஞர்தான்,
"பிரபாகரன் உயிரோடு இருக்கின்றாரா?
இறந்து விட்டாரா?" என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு,
"மாவீரர்களுக்கு
மரணமே கிடையாது!"
என்று உறுதி குலையாத பதிலிறுத்தார்!

வீழ்வது நாமாயினும்
வாழ்வது தமிழாகட்டும்!
என்னும் கலைஞரின் முழக்கம் தமிழ்ப் பெருங்குடி மக்களின் நெஞ்சமெனும் கல்வெட்டில் நிலைத்து விட்ட வரிகள் அல்லவா?

உறவுக்குக் கை கொடுப்போம்!
உரிமைக்குக் குரல்கொடுப்போம்!

என்னும் கவித்துவ முழக்கம்,
திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உரிய சித்தாந்த உறுதிப்பாட்டின் தத்துவ விளக்கம் அல்லவா?

விவேகம் என்னும்
வெள்ளி முளைத்து,
சாதிப்பித்து எனும்
சனி தொலைந்தால்தான்
சமத்துவம் என்னும்
ஞாயிறு பூக்கும்!
என்பது சமத்துவபுர வாசகம் மட்டுமா?
சமூக நீதிக் காவியமல்லவா!


அண்ணா வழியில்
அயராதுழைப்போம்!
ஆதிக்கமற்ற சமுதாயம்
அமைத்தே தீருவோம்!
இந்தித் திணிப்பை
என்றும் எதிர்ப்போம்!
வன்முறை தவிர்த்து
வறுமையை வெல்வோம்!
மாநிலத்தில் சுயாட்சி! மத்தியில் கூட்டாட்சி!

கழகத்தின் உயிர்நாடிக் கொள்கைகள் என்று தலைவர் கலைஞர் அவர்கள் நமக்கு வழங்கிச் சென்ற இந்த ஐம்பெரு முழக்கமே
மோனை நயம் குன்றாத முத்தமிழ்க் கவிதை தானே?

கீதாஞ்சலியினும் கீர்த்தி பெற்ற
உயிர்ப்புமிக்க கவிதையல்லவா,
பேரறிஞர் அண்ணாவுக்குத்
தலைவர் கலைஞர் அவர்கள் தன் கண்ணீரை மையாக்கித் தீட்டிய கவிதாஞ்சலி!

ஈடு, இணையில்லாத இலக்கியப் பெருவேந்தர்,
தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா
கொண்டாடப்படும் இந்தத் தருணத்தில் மட்டுமல்ல! இனிவரும் அத்தனை நூற்றாண்டு களிலும் தமிழ்கூறும் நல்லுலகத்தால் அவர் கொண்டாடப்படுவார்!

ஆண்டுகள் ஆயிரம் உருண்டாலும்
அவரை நினைக்கும் மனிதகுலம்!
ஆருயிர்த் தலைவரை வணங்கும் நமக்கு
அறிவா லயம்தான் புனிதத்தலம்!
மீண்டும் ஒருமுறை பிறந்தாலும்
வேண்டிநிற் பேன்ஓர் அன்புவரம்!
மேலும் அவர்க்கே உடன்பிறப்பாய்
பிறக்க வேண்டும்நான் நூறுதரம்!


கலைஞர்
100
1924 - 2023
நீட் விலக்கு நம் இலக்கு
#BAN NEET
04.11.2023
ஆரூர் மாவட்டத்திற்கு வருகைதரும்...
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே
வருக..! வருக..!!
டி.ஆர்.பி.ராஜா Ph.D.,
மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர்
தமிழ்நாடு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர்
மின்னும் மன்னை
DMK IT WING


நாள் : 05.11.2023 – இடம் : கலைஞர் திடல், ஐ.சி.எம்.ஆர். திருவள்ளூர்
வாக்குச்சாவடி பாக முகவர்கள்
BLA - 2 கூட்டத்தை தொடங்கி வைக்க
திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தரும்
இந்தியாவின் வழிகாட்டி
கழகத் தலைவர்
அவர்களே வருக! வருக!!
SPEAKING FOR INDIA
M.K.STALIN
ARASU ARTS
வெற்றி முழக்கத்தோடு வரவேற்கும் : வி.ஜி.இராஜேந்திரன் M.L.A
திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி – தலைமை செயற்குழு உறுப்பினர்




மாண்புமிகு கழகத்தின்

# தலைவரே!

மாண்புமிகு கழக இளைஞரணி

# செயலாளரே!

வருக..! வருக..!!

**திருத்தணி எஸ்.சந்திரன்** B.A., LLB., MLA.,

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச்செயலாளர் – திருத்தணி சட்டமன்ற உறுப்பினர்

அன்புடன்

**Dr.VCR.குமரன்** BAMS.,

மாவட்ட கழக துணை செயலாளர்

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

# நன்றி

தமிழ்நாடு விளையாட்டு
மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில்

திருப்பூர் மாவட்டம் - காங்கேயம் சட்டமன்ற தொகுதி
சிவன்மலையில் 6.56 ஏக்கர் பரப்பளவில்
சுமார் ரூ. 3.00 கோடி மதிப்பீட்டில்

**முதல்வரின்**
**சிறு விளையாட்டு மைதானம்**

அடிக்கல் நாட்டிய
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## தளபதி

அவர்களுக்கும்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

## உதயநிதி ஸ்டாலின்

அவர்களுக்கும்

காங்கேயம் சட்டமன்ற தொகுதி மக்களின் சார்பில்
எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மு.பெ.சாமிநாதன்

கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்








**சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.**
**இளைஞர் அணி** சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர்
# நூற்றாண்டு விழா

நாள் : 04.11.2023 சனிக்கிழமை ♦ மாலை 5.00 மணிக்கு
இடம் : ஏ.எல்.ஏ. திருமண மண்டபம், விருகம்பாக்கம்.

## இனமானம் காத்த
## தலைவரைப் போற்றும்
## இளைஞர் அரங்கம்

*பங்கேற்போர்*

**ஈரோடு மகேஷ்**

| | |
|---|---|
| தேவகோட்டை **இராமநாதன்** | திருவாரூர் **கார்த்திராஜா** |
| **சங்கரேஸ்வரி** | **ஃபௌசியா பானு** |

*நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரை*

திரு. **மா.சுப்பிரமணியன்** B.A.,LLB.,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ♦ சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்

## சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி

South digital 9840100489




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் (Tamil Nadu Digital Transformation Strategy DiTN) ஆவணத்தை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் தீரஜ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் (Sports Quota) விளையாட்டு வீரர்கள் எஸ்.மனோஜ், ஆனந்தன் மற்றும் செல்வி.ரோஸிமீனா ஆகியோருக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மேலாண்மை இயக்குநர் முனைவர் மு.சாய் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சந்தித்து, ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் 26.10.2023 அன்று நடைபெற்ற 7வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில், ஜப்பான் சுற்றுலா கண்காட்சி செயற்குழுவின் தலைவர் ஹிரோயுகி தகாஹாஷி (Hiroyuki Takahashi) அவர்கள் தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்கு வழங்கிய Executive Committee Award விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மைச் செயலாளர் /சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் /மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் உள்ளனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் வடக்கு ஒன்றியம், பெதப்பம்பட்டியில் திராவிடர் கழகத்தின் சார்பில் குலத்தொழிலைத் திணிக்கும் விஸ்வகர்மா யோஜனா மனுதர்ம யோஜனாவா? என்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் சதித்திட்டத்தை எதிர்த்து நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரையாற்றினார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், உடுமலை நகர கழக செயலாளர் செ.வேலுசாமி, மாவட்டப் பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத், ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) எஸ்.கே.மெய்ஞானமூர்த்தி, அனிக்கடவு பெ.கிரி உள்பட பலர் உள்ளனர்.

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் பேச்சுப் போட்டி!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லப்பாண்டியன் சிறப்புரை!

புதுக்கோட்டை.நவ.4-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி மாநில அளவிலான பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி இன்று (04.11.2023 - சனிக்கிழமை) ஸ்ரீ சுப பாரதி கலை அறிவியல் கல்லூரி கைக்குறிச்சி புதுக்கோட்டையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் பூவை சி.ஜெரால்டு, ஜெ.வீரமணி, பி.எம்.ஆனந்த் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் வரவேற்புரையாற்றுகிறார். அறந்தாங்கி இரா.இராசன், பரணி. இ.ஏ.கார்த்திகேயன், மிசா.சி.ராமநாதன், டாக்டர் ரகு. அண்ணாமலை, மாவட்ட கழக நிர்வாகிகள் அ.சுப்பிரமணியன், ஞான. இளங்கோவன், அ. ஸ்ரீதேவி அண்ணாத்துரை, க.அடைக்கலம், ஜெ.அபுதாஹிர், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உதயம் சண்முகம், அரு.வடிவேல்,, கே.பி.கே. டி.தங்கமணி, பொன்.ராமலிங்கம், க.இராஜேந்திரன், அழகு சிநம்பரம், வே. பொன் துரை, சக்தி இராமசாமி, அ.முத்து, பொன். கணேசன், கே.எஸ்.ரவி, எஸ்.எம்.சீனியார் (ஏ) முகமது அப்துல்லா, அ.அடைக்கலமணி வீ.ஆர்.இளையராஜா, ஆர்.கணேசன், எல். குமார் .கே.சி. சிவக்குமார் , அ.அழகப்பன், ஆ. பழனிக்குமார், நாசர் (எ) செந்தில்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்: ஆர்.ஆர். கே.கலைமணி, எஸ்.ஜெயராமன், இரா.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் சீனி. பழனியப்பன், என். வீரையா,

கே.எம்.சுப்பிர மணியன், ஆர்.வி.செல்வம், கலைவாணி சுப்பிர மணியன், ஒன்றியகுழு, பேரூர் தலைவர்கள் : வள்ளியம்மை தங்கமணி, மகேஸ்வரி சண்முகநாதன், மேகலா முத்து, சுதா அடைக்கலமணி, க.உமாதேவி காசிநாதன், ராசி.முருகானந்தம், சுந்தரி அழகப்பன், மாரிக்கண்ணு முத்துக்குமார். மாவட்ட அணி அமைப்பாளர்கள்: த.மணிராஜன், டி.வளர்மதி திருமாறன், எஸ்.குமரேசன் சிவ. பால இளங்கோ, சு. சுந்தரபாண்டியன், ஆர். ரம்யா பாலு, கே.ஆர்.ராமசாமி, இ.ஏ.பெரிய கருப்பன் டாக்டர் சுதர்சன், எம்.இராமலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர். முடிவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.எஸ்.ராஜா பெரியண்ணன் நன்றி கூறுகிறார்.

# சதுரங்கப் போட்டியில் கோவை சிறுவன் உலக சாதனை!

## சோ.துரைபாண்டியன் - சூரியன் தம்பி சிறுவனை வாழ்த்தினர்!

கோவை, நவ. 4-

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 15.10. 2023 அன்று நடைபெற்ற ரேபிட் சதுரங்க (செஸ்) சாம்பியன்ஷிப் போட்டியில் ,,ஐந்து வயது சிறுவன் ஸ்டீபன் ஆண்ட்ரூஸ் கலந்து கொண்டு 6 வயதினருக்குட்பட்ட பிரிவில் இந்திய அளவில் முதலாம் இடத்தையும்,, உலக அளவில் எட்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்... தமிழ்நாட்டைச் சேர்ந்த கோவை மாவட்டம் 35 வது வார்டைச் சார்ந்த அன்பு நகர் ரெண்டாம் வீதி இடையர்பாளையம் கோவை 25 என்ற முகவரியில் வசித்து வரும் ஐந்து வயது சிறுவன் சதுரங்க (செஸ்) போட்டியில் உலக சாதனை WORLD RECORD.. படைத்துள்ளார் .. 35 வது வட்டக் கழக அவைத் தலைவரும்,, அறங்காவலர் குழு தலைவருமான, சோ. துரைபாண்டியன் ஏற்பாட்டின் பேரில், சாதனை படைத்த சிறுவனை நேரில் சென்று கீழ்க்கண்டோர் பாராட்டி வாழ்த்தினோம். கோவை வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் வே. சூரியன் தம்பி,, கவுண்டம்பாளையம் காவல் நிலைய துணை ஆய்வாளர் விவேக்,, கா . பொன்னரசு, ஆகியோர்முன்னிலையில்,, ஆலிஸ் பிரசன்னா, வரதராஜ் IFS, சந்திரலிங்கம், விஜயகுமார், , ரவி முரசு, ராம்குமார், குமரேசன், தயானந்தன், மோகன் ராஜ், பாலன், இளைஞர் அணி விக்னேஷ், கராத்தே மாஸ்டர் மோகன் குமார், காவல் துணை ஆய்வாளர்கள் (ஓய்வு) மதிவாணன், பரமேஸ்வரன், மற்றும் மிதின்,, சரஸ்வதி, நந்தினி,, ஆகியோர் சந்தித்தோம்.. அப்போது சாதனை படைத்த சிறுவனுடைய தாயார் விபிதா மெர்சி , தாத்தா வில்லியம் பால், பாட்டி பிரேமலதா ஆகியோர் உடன் இருந்தனர்.. இளைஞர் அணி துணை அமைப்பாளர் வே. சூரியன் தம்பி பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்.





முதலமைச்சர் அவர்களின் மேலான வழிகாட்டுதலின்படி கல்விசாரா மற்றும் மன்ற செயல்பாடுகளில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுப் பள்ளி மாணவச் செல்வங்கள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு கல்விச் சுற்றுலா செல்கின்றனர். அதனையொட்டி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகம் வருகை புரிந்திருந்த 100 மாணவர்களை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வரவேற்றார். அம்மாணவர்களுடன் உரையாடி பயணத்திற்குத் தேவையான உபகரணங்களை வழங்கி வாழ்த்துகள் தெரிவித்துக்கொண்டார். இம்மாணவர்களை நவம்பர் 4 முதல் நவம்பர் 11 வரை ஜப்பான் மற்றும் தென்கொரியா நாடுகளில் உள்ள பல்வேறு இடங்களுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அழைத்துச் செல்கிறார். முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 'அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல! அது பெருமையின் அடையாளம்' என்பதற்கு இப்பயணமும் ஒரு சாட்சியாக அமைந்திருக்கிறது.

## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

### ஒன்றியம்/பகுதி, நகரம், மற்றும் பேரூர்க் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்பது குறித்து

### அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக விளையாட்டு மேம்பாட்டு அணியில் ஒன்றியம்/ பகுதி நகரம், மற்றும் பேரூர்க் கழக அமைப்பாளர் மற்றும் பொறுப்புக்களுக்கு துணை விண்ணப்பிக்க அமைப்பாளர்களுக்கான ஆர்வம் உள்ள நபர்கள் அதற்கான விண்ணப்பப் படிவங்களை www.dmksportswing.in என்கிற இணையத் தளத்தின் வாயிலாக தரவிறக்கம் செய்தோ அல்லது முரசொலி நாளிதழில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை பூர்த்தி செய்தோ, வருகின்ற 20.11.2023க்குள் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களிடம் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா அறிவாலயம்,
நாள்: 02.11.2023

**தயாநிதி மாறன்**, எம்.பி.
செயலாளர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி

**தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி**

ஒன்றியம் - பகுதி - நகரம் - பேரூர்க் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் சுயவிவரப் படிவம்

மாவட்டம் : ..........
சட்டமன்றத் தொகுதி : ..........
ஒன்றியம் : ..........
பகுதி : ..........
நகரம் : ..........
பேரூர் : ..........

புகைப்படம்

விண்ணப்பிக்கும் பொறுப்பு :

| | | | |
|---|---|---|---|
| ☐ ஒன்றியம்/பகுதி அமைப்பாளர் | ☐ ஒன்றியம்/பகுதி துணை அமைப்பாளர் | ☐ ஒன்றியம்/பகுதி துணை அமைப்பாளர் (சமூக வலைதளப் பொறுப்பாளர்) | ☐ ஒன்றியம்/பகுதி துணை அமைப்பாளர் (மகளிர்) |
| ☐ நகரம் அமைப்பாளர் | ☐ நகரம் துணை அமைப்பாளர் | ☐ நகரம் துணை அமைப்பாளர் (சமூக வலைதளப் பொறுப்பாளர்) | ☐ நகரம் துணை அமைப்பாளர் (மகளிர்) |
| ☐ பேரூர் அமைப்பாளர் | ☐ பேரூர் துணை அமைப்பாளர் | ☐ பேரூர் துணை அமைப்பாளர் (சமூக வலைதளப் பொறுப்பாளர்) | ☐ பேரூர் துணை அமைப்பாளர் (மகளிர்) |

பெயர் : ..........
தந்தை / கணவர் பெயர் : ..........
பிறந்த தேதி : .......... வயது : .......... கல்வித் தகுதி : ..........
முகவரி : ..........
மாநில/மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்று இருப்பின் அதன் விவரங்கள் : ..........
விருப்பமான விளையாட்டு : ..........
தொடர்பு எண் : ..........
மின்னஞ்சல் : ..........

இப்படிவத்தில் குறிப்பிட்ட எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கிறேன்

நாள் : (கையொப்பம்)

குறிப்பு 1) புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டையின் நகல் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.
2) பூர்த்தி செய்த விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களிடம் வருகின்ற 20.11.2023-க்குள் ஒப்படைத்திட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் 'நீட் விலக்கு நமது இலக்கு' என்ற கையெழுத்து இயக்கத்தை மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் மாநில ஆதிதிராவிடர் நல குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி துவக்கி வைத்தார். இதில் மாவட்ட அமைப்பாளர் ஞானசேகரன் அனைவரையும் வரவேற்றார். ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்து கையெழுத்திட்டனர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தேனி தெற்கு மாவட்டம்

### கம்பம் தெற்கு நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

தேனி தெற்கு மாவட்டம், கம்பம் தெற்கு நகரச் செயலாளர் சூர்யா ஆர்.கே.செல்வகுமார், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **சி.பால்பாண்டியராஜா**, (15, பாரதியார் நகர் வடக்கு 7வது தெரு, கம்பம் 625 516. தேனி மாவட்டம்.) அவர்கள் கம்பம் தெற்கு நகர கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 02.11.2023

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவ அணி இணைச் செயலாளருமான டாக்டர்.இரா.இலட்சுமணன் அவர்கள் விழுப்புரம் தொகுதி, கோலியனூர் தெற்கு ஒன்றியம், காவணிப்பாக்கம், முனியன் – ரஞ்சிதம் அவர்களின் வீடு எரிந்து சேதமானதை அறிந்து நேரில் சென்று பார்வையிட்டு, அத்தியாவசிய பொருட்கள் மற்றும் நிதி உதவி அளித்து ஆறுதல் கூறினார். உடன் தே.முருகவேல், இ.சச்சிதானந்தம், இரா.கேசவன், கிருஷ்ணதாஸ், ஆர்.ஐ. ராபர்ட், கார்த்தி, கலியமூர்த்தி, கிருஷ்ணன், விஸ்வநாதன், குமார், ராஜாராம், ராஜேந்திரன், பாலாஜி, ஜெயராமன், குமார் மற்றும் பலர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர். மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 204 கோடியே 1 இலட்சத்து 19 ஆயிரத்து 409 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன், தலைமைச் செயலாளர் . சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், 'டிட்கோ' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் (TIIC) 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 15 கோடியே 17 இலட்சத்து 61 ஆயிரத்து 400 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், . ஹன்ஸ் ராஜ் வர்மா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இந்திய விடுதலைப் போராட்ட தியாகிகளை அவமதித்த

# ஆளுநர் கையால் முனைவர் பட்டம் பெற மறுத்த பேராசிரியர்களுக்கு வாழ்த்து!

## பொதுப்பள்ளிக்கான மாநில மேடை பொதுச்செயலாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு அறிக்கை!



சென்னை, நவ. 4 -

இந்திய விடுதலைப் போராட்ட தியாகிகளை அவமதித்த ஆளுநர் ஆர். என்.ரவி கையால் முனைவர் பட்டம் வழங்கப்பட இருந்த பட்டமளிப்பு விழாவை புறக்கணித்த பேராசிரியர் சுரேஷ் மற்றும் பேராசிரியர் சி. ரமேஷ் ராஜ் ஆகியோருக்கு வாழ்த்துகள் என்றும், பட்டமளிப்பு விழாவை புறக்கணித்த TNGCTA, MUTA, MUFA ஆகிய ஆசிரியர் அமைப்புகளுக்கு பாராட்டுகள் என்றும் பொதுப்பள்ளிக்கான மாநில மேடை பொதுச்செயலாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

இந்திய விடுதலைப் போராட்டத் தியாகியை அவமதிக்கும், பல்கலைக்கழகம் சுதந்திரமாக செயல்படுவதை அனுமதிக்க மறுக்கும், பல்கலைக் கழகத்தின் வேந்தராக பொறுப்பு வகிக்கும் ஆளுநர் கையால் முனைவர் பட்டம் பெற மறுத்த தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுரேஷ், மூட்டா முதலாம் மண்டலத்தின் தலைவர் பேராசிரியர் சி. ரமேஷ் ராஜ் ஆகியோருக்கு வாழ்த்துகள்.

ஆசிரியருக்கு உண்டான முழு இலக்கணத்துடன் நடந்துக் கொண்டுள்ள பேராசிரியர் சுரேஷ், பேராசிரியர் ரமேஷ் ராஜ் ஆகியோர் வாழ்க.

மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக் குழுவில் இருக்கும் TNGCTA, MUTA, MUFA ஆகிய அமைப்பின் Senate மற்றும் Syndicate உறுப்பினர்கள் பட்டமளிப்பு விழாவை புறக்கணித்து ஆசிரியர்களின் கண்ணியத்தையும், பல்கலைக் கழகத்தின் மாண்புகளையும் காத்துள்ளனர்.

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில், விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்களுக்கு மிகப் பெரும் ஊக்க சக்தியாக விளங்கியவர்கள் ஆசிரியர்கள். பிரிட்டிஷ் அரசுக் கல்லூரிப் பணியில் இருந்து விலகி ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றவர்கள் அன்றைய ஆசிரியர் பெருமக்கள்.

விடுதலைப் போராட்ட உணர்வுகளுடன் இந்திய மக்களின் இறையாண்மை, கூட்டாட்சித் தத்துவம், மக்களாட்சியின் மாண்புகள், பல்கலைக்கழகத்தின் தன்னாட்சி அதிகாரம் ஆகிய வற்றை காத்திட இன்று (நவம்பர் 2, 2023) மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவை புறக்கணித்துள்ள ஆசிரியர் அமைப்புகளுக்கும், தங்களின் நேரத்தை செலவிட்டு, கடும் உழைப்பின் பயனால் தாங்கள் பெற இருந்த முனைவர் பட்டம் வழங்கிடும் விழாவை புறக்கணித்துள்ள பேராசிரியர் பெருமக்களுக்கும் பொதுப் பள்ளிக்கான மாநில மேடை தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

மெக்கார்த்திசத்தை (McCarthyism) எதிர்த்துப் போராடுங்கள் என்று ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நோபல் பரிசு பெற்ற இயற்பியல் பேராசிரியர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அன்று அறைகூவல் விடுத்தார்.

விடுதலை இந்தியாவில், மக்களின் இறையாண்மையை உறுதிப்படுத்தும் இந்திய அரசமைப்புச் சட்டத்தை காத்திட எத்தகைய தியாகத்தையும் செய்ய இந்திய மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்று அண்ணல் அம்பேத்கர் அவர்கள் அரசியல் சாசன நிர்ணய சபையில் இருந்தே அறைகூவல் விடுத்தார்.

இன்றைய பட்டமளிப்பு விழாவை புறக்கணித்துள்ள TNGCTA, MUTA, MUFA ஆகிய அமைப்புகளின் பேராசிரியர் பெருமக்கள் இந்திய நாட்டின் அரசமைப்புச் சட்டம் முன்வைக்கும் மக்களிடம் இறுதி இறையாண்மைக் கொண்ட, சோஷலிச, சமயச் சார்பற்ற, ஜனநாயக குடியரசான இந்தியாவை காத்திட உழைக்கும் வர்க்கமாக ஆசிரியர்கள் அணித் திரள்வார்கள் என்ற பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளனர். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் காத்திட வர்க்க ஒற்றுமை ஓங்கட்டும்!

இவ்வாறு பொதுப் பள்ளிக்கான மாநில மேடை பொதுச் செயலாளர் பு. பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சேலம் கிழக்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் வேண்டுகோள்!



சேலம், நவ. 4 -

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் கிழக்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிக்கு சட்டமன்றத் தொகுதி வாரியாக பொறுப்பாளர்கள் நியமனம்.

சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வாக்குசாவடிகளிலும் 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்கள் வாக்காளர்களிக்க தகுதியேற்படுத்தும் நாளாக 01.01.2024 கொண்டு இந்திய தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வாக்காளர் பட்டியலை வெளியிட்டு உள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்க்கவும், நீக்கவும், திருத்தம் செய்யவும் 27.10.2023 முதல் 09.12.2023 வரை கால அவகாசம் கொடுக்கப் பட்டுள்ளது. சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களாக 04.11.2023 சனிக்கிழமை, 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை மேலும் 18.11.2023 சனிக்கிழமை, 19.11.2023 ஞாயிற்றுக் கிழமை ஆகிய நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் நடைபெற உள்ளது. புதிய வாக்காளர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாதவர்கள் பெயர்களையும், புதிதாக குடிஅமர்ந்த வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள், இறந்தவர்கள் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும்.

இந்த பணிகளில் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டும். இந்த வாக்குச்சாவடி பட்டியல் சரிபார்த்தல் பணியில் கழக நிர்வாகிகளோடு, பாக நிலை முகவர்கள் (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள்(BLC), மற்றும் கீழ் காணும் நிர்வாகிகள் சிறப்பு கவனம் செலுத்தி மேற்பார்வையிட்டு வாக்காளர் சரிபார்த்தல் பணியினை முழுமையாக நிறைவேற்றிட பணியாற்ற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### புதுச்சேரியில் – கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

# தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் பேச்சுப்போட்டி!

## பொறியியல் மாணவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அறிக்கை!

புதுச்சேரி, நவ. 4 -

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று அறிவுறுத்தியதின் அடிப்படையில், புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக புதுச்சேரி மாநில திமுக பொறியாளர் அணி சார்பில் பொறியியல் மாணவர்களுக்கான மாபெரும் பேச்சுப்போட்டி இன்று (04.11.2023) காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை மதகடிப்பட்டு மணக்குள விநாயகர் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறுகிறது.

மாநில பொறியாளர் அணி அமைப்பாளர் அருண்குமார் வரவேற்க, திருபுவனைத் தொகுதி செயலாளர் செல்வபார்த்திபன், பொறியாளர் அணி நிர்வாகிகள் மணிகண்டன், உமாபதி, முகுந்தன், சுவர்ணராஜ், எழிலரசன், அர்ஜுன் (எ) ரங்கராஜ், பிரகாஷ், ரமேஷ், பிரபாகரன், வீரமணிகண்டன், சுவாதி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் போட்டியை, மாநில பொறியாளர் அணித் தலைவர் துரை. கி. சரவணன், அணிச் செயலாளர் கு. கருணாநிதி ஆகியோர் துவக்கி வைத்து, போட்டியை நடத்துகின்றனர்.

அவைத் தலைவர் எஸ். பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம். எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம். எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

தொழில்நுட்பக் கல்விக்கு தோள் கொடுத்தவர் கலைஞர், தொழில் துறையை உயர்த்தியவர் தமிழினத் தலைவர், திராவிட மாடலும் திறன்மிக்க கல்வியும், தெற்கு சூரியன், கலைஞரும் தமிழும் என்ற தலைப்புகளில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் புதுச்சேரியில் உள்ள அரசு மற்றும் தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த இளங்கலை, முதுகலை பொறியியல் மாணவர்கள், பாலிடெக்னிக், ஐடிஐ மாணவர்கள் பதிவு செய்தவர்கள், பதிவு செய்யாதவர்கள் பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்த வேண்டும்.

மாநில அளவில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு கேடயத்துடன் ரூ. 10 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூ. 5 ஆயிரம். மூன்றாம் பரிசு ரூ. 3 ஆயிரம் வழங்கப்படுகிறது. இதில் வெற்றி பெறுபவர்கள் மண்டல அளவில் நடைபெறும் போட்டியில் பங்கு பெறலாம். இறுதிச் சுற்றில் வெல்பவர் ரூ. 5 லட்சம் ரொக்கம் மற்றும் சுழற்கோப்பையும் பெறுவர்.

# கரூர் மாவட்டம்

## கரூர் மத்திய பகுதி - கரூர் மத்திய மேற்கு பகுதி மற்றும் அரவக்குறிச்சி பேரூர்க் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில்;

கரூர் மாவட்டம், கரூர் மாநகரம், கரூர் மத்திய பகுதிச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ் அவர்களை, கரூர் மத்திய பகுதிச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, திரு. **வி.ஜி.எஸ்.குமார்** *(47, பாரதிதாசன் தெரு, கோவை ரோடு, கரூர், கரூர் மாவட்டம்)* அவர்கள் கரூர் மத்திய பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும்;

அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம், அரவக்குறிச்சி பேரூர்க் கழகச் செயலாளர் என்.மணிகண்டன் அவர்களை, அரவக்குறிச்சி பேரூர்க் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. **பி.பாலசுப்பிரமணி (எ) பி.எஸ்.மணி** (11/1, பொன் நகர், அரவக்குறிச்சி & அஞ்சல், கரூர் மாவட்டம்) அவர்கள் அரவக்குறிச்சி பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுவதுடன்,

கரூர் மத்திய மேற்கு பகுதிச் செயலாளர் கா.அன்பரசன் அவர்களை, அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. **ஆர்.ஜோதிபாசு** *(4, திருநகர் 3வது கிராஸ், காமராஜபுரம் வடக்கு, செங்குந்தபுரம் அஞ்சல், கரூர் வட்டம் & மாவட்டம்)* அவர்கள் கரூர் மத்திய மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த பகுதி மற்றும் பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள், இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02.11.2023

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மரக்காணம் ஒன்றியம், நல்லூரைச் சேர்ந்த எஸ்.கண்ணன் அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப் பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02.11.2023

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# பூசாரிகள் நலச் சங்கம் அறிவிப்பு!

கோவை, நவ. 4 -

கோவில் பூசாரிகள் நலச் சங்கத்தின் கோவை மாவட்டப் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நாளை ( 05/11/2023 - ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 12மணிக்கு கோவை மாவட்டம் அரசூர் தங்கநாயகி அம்மன் திருக்கோவில் வளாகத்தில் சங்கத்தின் மாநில தலைவர் பி.வாசு முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் புதிய முக்கிய முடிவுகள் எடுக்க உள்ளதால் கோவை, நீலகிரி , திருப்பூர் மாவட்ட பொறுப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கே.சுந்தரம் மாநில பொருளாளர் கோவில் பூசாரிகள் நலச் சங்கம் கோவை கேட்டுக் கொள்கிறார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்டத்தில் வசிக்கும் நரிக்குறவர்கள் சமுதாயத்தைச் சேர்ந்த 25 ஜோடிகளுக்கு ரூ.25 லட்சம் மதிப்பிலான சீர்வரிசைப் பொருட்களை தனது சொந்த செலவில் வழங்கி திருமணம் செய்து வைத்தார். கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. ஜே.கே.மகால் திருமண மண்டபத்தில் சீர்திருத்த திருமணத்தை நடத்தி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் செ.வல்லபன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இர.ப.பரமேஷ்குமார், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வி.எஸ்.பெரியசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், ஒன்றியச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, ம.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணை பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன், ஆர்.அருண் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



டிசம்பர் 17 ஆம் தேதி சேலத்தில் தி.மு.க. இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற உள்ளது. இதில், நீலகிரி மாவட்டத்திலிருந்து ஏராளமான இளைஞர்கள் கலந்து கொள்ள தங்களது பெயர்களை அந்தந்த பகுதிகளில் தாங்களாகவே ஆர்வமுடன் பதிவு செய்து வருகின்றனர். இந்நிலையில் உதகை தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பதிவு செய்த இளைஞர்களின் பெயர் பட்டியலை மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக செயலாளர் பா.மு.முபாரக், உதகை தெற்கு ஒன்றியச் செயலாளர் பரமசிவன் ஆகியோரிடம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இமயம் சசிகுமார், மாவட்ட துணை அமைப்பாளர் நாகராஜ் ஆகியோர் வழங்கினர். அப்போது, மாவட்ட நிர்வாகிகள் ரவிகுமார், நாசர் அலி மற்றும் சதக்கத்துல்லா, தொரை, எல்கில் ரவி, கார்திக், மூர்த்தி, பெரியசாமி, நவீன், குண்டன், செல்வம், ராஜ்6, ராமன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



நெல்லித்தோப்பு “தொகுதி கழக நிர்வாகிகள்”, “கிளைக் கழகச் செயலாளர்கள்” ஆலோசனைக் கூட்டம் லெனின் வீதியில் அமைந்துள்ள தொகுதி கழக அலுவலகத்தில் நடைபெற்றது. தொகுதி கழக அவைத் தலைவர் கி.பானுகணேசன் தலைமை தாங்கினார். பொதுக்குழு உறுப்பினர் வே.கார்த்திகேயன் முன்னிலை வகித்தார். தொகுதி கழகச் செயலாளர் செ.நடராஜன், பெ.வேலவன் (முன்னாள் நகர மன்ற உறுப்பினர்) ஆகியோர் வரவேற்று பேசினார்கள். கூட்டத்தில் மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

### வடகிழக்குப் பருவமழை – வெள்ளத்தை

# அரசு திறம்பட எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் ஆய்வு!

சென்னை, நவ.4 -

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை - முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

வடகிழக்கு பருவமழை 21.10.2023 அன்று தொடங்கியதிலிருந்து, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

தமிழ்நாட்டில், 01.10.2023 முதல் 01.11.2023 வரை 101.8 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது இயல்பான மழையளவைக் காட்டிலும் 43 விழுக்காடு குறைவு ஆகும். வடகிழக்கு பருவமழைக் காலத்தில் 01.11.2023 முடிய, 1 மாவட்டத்தில் அதிகமான மழைப்பொழிவும், 32 மாவட்டங்களில் குறைவான மழைப்பொழிவும், 5 மாவட்டங்களில் இயல்பான மழைப்பொழிவும் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (02.11.2023) காலை 8.30 மணி முடிய 33 மாவட்டங்களில் 8.74 மி.மீ. மழை பெய்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகபட்சமாக 37.03 மி.மீட்டரும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் குறைந்தபட்சமாக 0.06 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.09.2023 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்தி வடகிழக்குப் பருவமழைக்கென மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்துத் துறை அரசு அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார்கள்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

தலைமைச் செயலாளர் 14.09.2023 அன்று அனைத்துத் துறை அலுவலர்கள், முப்படை மற்றும் ஒன்றிய அரசு அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி வடகிழக்கு பருவமழையினை திறம்பட எதிர்கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அறிவுரை வழங்கினார்.

வடகிழக்குப் பருவமழை காலத்தில் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்திட தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களில் ஜே.சி.பி. இயந்திரங்கள், மரம் அறுப்பான்கள் உள்ளிட்ட உபகரணங்களுடன், பல்துறை மண்டல குழுக்களையும், மீட்புக் குழுக்களையும், நிவாரண முகாம்களையும் தயார் நிலையில் வைத்திடுமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு 25.09.2023 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் தங்கு தடையின்றி எரிபொருள் கிடைக்கவும், தொலைத்தொடர்பு சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், எண்ணெய் / தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் 05.10.2023 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்தி அறிவுரை வழங்கினார்.

25.10.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அனைத்து மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டது.

அனைத்து மாவட்டங்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களுக்கும், கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு வெள்ளத் தணிப்பு பணிகளின் காரணமாக 4399 ஆக இருந்த பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள், தற்போது 3770ஆக குறைந்துள்ளது. வெள்ளத் தணிப்பு பணிகளுக்காக 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளில் சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாகம் மற்றும் நீர்வள ஆதாரத் துறை ஆகிய துறைகளுக்கு 819.50 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவுரையின் பேரில் வடகிழக்கு பருவமழையை திறம்பட எதிர்கொள்ள பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநில / மாவட்ட அவசர கால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசிகளுடனும், கூடுதலான அலுவலர்களுடனும் இயங்கி வருகின்றன.

பொதுமக்கள், Whatsapp எண்.94458 69848 மூலம் புகார்களை பதிவு செய்யலாம்.

424 கடலோரப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள முன் எச்சரிக்கை அமைப்புகள் மூலம் சைரன் ஒலி, நேரடி ஒளி பரப்பு மூலம் எச்சரிக்கைகள்



மற்றும் பதிவு செய்யப்பட்ட எச்சரிக்கை செய்திகள் பரப்பப்படுகின்றன.

பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறை மூலம் பொதுமக்களுக்கு புயல், வெள்ள அபாய எச்சரிக்கை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு புயல், கனமழை மற்றும் காற்றின் வேகம் குறித்து நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாக முன்னெச்சரிக்கை வழங்கப்பட்டு அவர்களது பாதுகாப்பு உறுதிசெய்யப்படுகிறது.

TNSMART செயலி மூலமாகவும், அச்சு, மின்னணு மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் பொதுமக்களுக்கு உரிய காலத்தில் வானிலை முன்னறிவிப்பு, வெள்ள அபாய எச்சரிக்கை மற்றும் மின்னல் எச்சரிக்கை வழங்கப்படுகிறது.

14 கடலோர மாவட்டங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் 65,000 முதல் நிலை மீட்பாளர்களுக்கு பேரிடர் மேலாண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதோடு, 16 மாவட்டங்களில் ஆப்த மித்ரா திட்டத்தின் கீழ் 5500 தன்னார்வலர்களுக்கான பயிற்சி அளிக்கப்பட்டு அனைவரும் தயார் நிலையில் உள்ளனர்.

அனைத்து மாவட்டங்களிலும், தேடல், மீட்பு உபகரணங்கள் மற்றும் நிவாரணப் பொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கடலோர மாவட்டங்களில் 1.13 இலட்சம் நபர்கள் தங்கும் வகையில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் உள்ளன.

பள்ளிகள், கல்லூரிகள், சமூகக் கூடங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் என மொத்தம் 4967 நிவாரண முகாம்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி பொறுத்தமட்டில் 169 நிவாரண முகாம்கள் உள்ளதோடு, மழைநீரை வெளியேற்ற 260 பம்புகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

பேரிடர் காலங்களில் தேடல், மீட்பு பணிகளை துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பழனி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் 400 வீரர்கள் கொண்ட 12 குழுக்கள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

மேலும், தேசிய பேரிடர் மீட்புப்படையின் குழுக்கள் அரக்கோணத்திலும், சென்னையிலும் தயார் நிலையில் உள்ளன.

மாவட்ட ஆட்சியர்களுக்கான அறிவுரை

பாதிப்பிற்குள்ளாகக் கூடிய பகுதிகளுக்கென பல் துறை மண்டலக் குழுக்கள் அமைத்து கண்காணிக்கவும்;

பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் உள்ள பொதுமக்களை வெளியேற்றும் போது மாற்றுதிறனாளிகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும்;

நிவாரண முகாம்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், மருத்துவ வசதி, மின்சாரம் மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும்;

பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைக்கவும்;

மின்கசிவினால் ஏற்படும் விபத்துகளை தவிர்க்கவும்;

பள்ளி மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும்;

நோய்த்தொற்று ஏற்படாமல் இருக்கவும்; நோய்த்தொற்று பரவலைத் தடுக்கவும்; மருத்துவமனைகளில் போதுமான மருந்து இருப்பு வைக்கவும்;

பலவீனமான மற்றும் சேதமடைந்த கட்டடங்களை பொதுமக்கள் பயன்படுத்தாத வகையில் தடுப்பு ஏற்படுத்தி, பாதுகாப்பாக இடித்து அப்புறப்படுத்தவும்;

பலவீனமான மரக்கிளைகள், விழும் நிலையில் உள்ள மரங்களை அப்புறப்படுத்தவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மனித உயிரிழப்பு, கால்நடை இறப்பு மற்றும் சேதமடைந்த குடிசை/ வீடுகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் தேவையான அலுவலர்களை தொடர்பு கொள்ளும் வகையில் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால் தயாரிக்கப்பட்ட தொலைபேசி கையேட்டை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் வெளியிட்டார்கள்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களது ஆய்வின் போது கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே. ராஜாராமன், பேரிடர் மேலாண்மை இயக்குநர், சி.அ.ராமன் ஆகிய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைப்படி 01.01.2024 ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. அதன்படி திருச்சி தெற்குமாவட்டத்திற்கு உட்பட்ட திருச்சிகிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளுக்கு புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்ய 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்களும் நடைபெறவுள்ளது. அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது விபரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 01.01.2024 அன்று 18வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள பட்டியலிலிருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் ஆணையம் 27.10.23 அன்று வெளியிட்டுள்ள வாக்காளர் பட்டியலை பெற்றுச் சென்ற அனைத்து பகுதி,ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உடனடியாக அனைத்து வாக்குச்சாவடி பாக முகவர்களுக்கு அளித்து, மேற்கண்டவாறு அறிவித்துள்ள சிறப்பு முகாம் நடைபெறவிருக்கும் திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள பொறுப்பாளர்கள், அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்காளர் முகாம்களுக்கு பகுதி,ஒன்றிய, நகர,பேரூர், வட்ட, வார்டு கிளை கழக செயலாளர்களுடன்சென்று கண்காணிக்கவும், வாக்குச்சாவடி முகவர்கள்,வாக்குச்சாவடி உறுப்பினர்கள் ஆகியோர்முகாமில்உள்ளார்களா என உறுதி செய்தும் இவ்வாய்ப்பினை வாக்காளர்கள் பட்டியலில் பெயர் சேர்க்க, வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்குதல், திருத்தம், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைப்பு போன்ற பணிகளை BLA2 பொறுப்பாளர்கள்இதைசரிபார்த்து,இப்பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

| வ. எண் | பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் | பகுதி / ஒன்றிய/ நகர/செயலாளர்கள் | பொறுப்பாளர்கள் |
|---|---|---|---|
| 1. | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | கே.எஸ்.எம். கருணாநிதி ஒன்றிய கழக செயலாளர் | கே.என்.சேகரன், தலைமை செயற்குழு உறுப்பினர்<br>பி.கிருஷ்ணகோபால், மாவட்ட அமைப்பாளர் |
| 2. | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | சி.கங்காதரன் ஒன்றிய கழக செயலாளர் | அ.த.த.செங்குட்டுவன், மாவட்ட துணை செயலாளர்<br>கேபிள் தினகரன், மாநகர அமைப்பாளர் |
| 3. | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | வி.ஏ.ராஜேந்திரன் ஒன்றிய கழக செயலாளர் | என்.கோவிந்தராஜ், மாவட்ட அவை தலைவர்<br>ஆர்.பி.சுந்தர்ராஜ், மாவட்ட அமைப்பாளர் |
| 4. | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | ஆர்.ஸ்ரீரங்கன் ஒன்றிய கழக செயலாளர் | இரா.மூக்கன், மாவட்ட துணை செயலாளர்<br>ஜெ.ஜெ.மகேஸ், மாவட்ட அமைப்பாளர் |
| 5. | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | சி.செல்வராஜ் ஒன்றிய கழக செயலாளர் | பி.எம்.சபியுல்லா, தலைமை செயற்குழு உறுப்பினர்<br>பா.சரவணன், மாநகர அமைப்பாளர் |
| 6. | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | சி.சின்ன அடைக்கண் ஒன்றிய கழக செயலாளர் | லீலாவேலு, மாவட்ட துணை செயலாளர்<br>பி.ஏ.நூர்கான், மாநகர அவை தலைவர் |
| 7. | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | எம்.பழனியாண்டி ஒன்றிய கழக செயலாளர் | பி.அருள்சுந்தர்ராஜ், மாவட்ட அமைப்பாளர்<br>எம்.ஜியாவுதீன், மாவட்ட அமைப்பாளர் |
| 8. | மணப்பாறை ஒன்றியம் | சி.ராமசாமி ஒன்றிய கழக செயலாளர் | டால்பின் சாலமன், மாவட்ட அணி அமைப்பாளர்<br>எம்.பன்னீர்செல்வம், மாநகர அமைப்பாளர் |
| 9. | மலைக்கோட்டை பகுதி | மருந்துக்கடை ஆர்.மோகன் பகுதி கழக செயலாளர் | ஆறு.சந்திரமோகன், மாநகர துணை செயலாளர்<br>பி.எம்.குறிஞ்சி மன்னன், மாநகர அமைப்பாளர் |
| 10. | மார்க்கெட் பகுதி | ஆர்.ஜி.பாபு பகுதி கழக செயலாளர் | பொன்.செல்லையா, மாநகர துணை செயலாளர்<br>ஏ.எம்.அசாருதீன், மாநகர அமைப்பாளர் |
| 11. | பாலக்கரை பகுதி | டி.பி.எஸ்.எஸ்.ராஜ்முகமது பகுதி கழக செயலாளர் | கே.கே.கே.கார்த்தி, பொதுக்குழு உறுப்பினர்<br>டி.செந்தில், மாநகர அமைப்பாளர் |
| 12. | கலைஞர் நகர் பகுதி | ஜி.மணிவேல் பகுதி கழக செயலாளர் | எம்.தமிழ்செல்வம், மாநகர பொருளாளர்<br>கே.லோகநாதன், மாநகர அமைப்பாளர் |
| 13. | அரியமங்கலம் பகுதி | ஏ.எம்.ஜி.விஜயகுமார் பகுதி கழக செயலாளர் | யு.ராஜேஸ்வரன், பொதுக்குழு உறுப்பினர்<br>கோவி.நாகராஜ், மாநகர அமைப்பாளர் |
| 14. | பொன்மலை பகுதி | இ.எம்.தர்மராஜ் பகுதி கழக செயலாளர் | கே.ஏ.வி. தினகரன், மாவட்ட அமைப்பாளர்<br>எஸ்.அடைக்கலராஜா, மாவட்ட அமைப்பாளர் |
| 15. | காட்டூர் பகுதி | ஓ.நீலமேகம் பகுதி கழக செயலாளர் | என்.செந்தமிழ் செல்வன், மாவட்ட அமைப்பாளர்<br>ஏ.பி.ரகுநாதன், மாநகர அமைப்பாளர் |
| 16. | திருவெறும்பூர் பகுதி | எஸ்.சிவக்குமார் பகுதி கழக செயலாளர் | கோ.ரமேஷ், மாவட்ட அமைப்பாளர்<br>எஸ்.இப்ராஹிம், மாநகர அமைப்பாளர் |
| 17. | துவாக்குடி நகரம் | இ.காயாம்பு நகர கழக செயலாளர் | எம்.சி.சிவக்குமார், மாவட்ட அமைப்பாளர்<br>என்.ரமேஷ், மாநகர அமைப்பாளர் |
| 18. | மணப்பாறை நகரம் | மு.ம.செல்வம் நகர கழக செயலாளர் | முத்தமிழ் கருணாநிதி, மாவட்ட அமைப்பாளர்<br>நவல்பட்டு கே.சண்முகம், பொதுக்குழு உறுப்பினர் |
| 19. | கூத்தைப்பார் பேரூர் | எம்.ஆர்.டி.பி.கே.தங்கவேலு பேரூர் கழக செயலாளர் | ஆ.சோழமாதேவி ஜெகதீசன், மாவட்ட அமைப்பாளர்<br>புலவர் ந.ப.மனோகரன், மாவட்ட அமைப்பாளர் |
| 20. | பொன்னம்பட்டி பேரூர் | கே.ஏ.நகராஜ் பேரூர் கழக செயலாளர் | இரா.குணசேகரன், மாவட்ட பொருளாளர்<br>எம்.முகமது இலியாஸ், மாவட்ட அமைப்பாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.



சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 15.10. 2023 அன்று நடைபெற்ற ரேபிட் சதுரங்க (செஸ்) சாம்பியன்ஷிப் போட்டியில், ஐந்து வயது சிறுவன் ஸ்டீபன் ஆண்ட்ரூஸ் கலந்துகொண்டு 6 வயதினருக்குட்பட்ட பிரிவில் இந்திய அளவில் முதலாம் இடத்தையும், உலக அளவில் எட்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். தமிழ்நாட்டைச் சேர்ந்த கோவை மாவட்டம் 35வது வார்டைச் சார்ந்த அன்புநகர் ரெண்டாம் வீதி இடையர்பாளையம் கோவை 25 என்ற முகவரியில் வசித்து வரும் ஐந்து வயது சிறுவன் சதுரங்க (செஸ்) போட்டியில் உலக சாதனை WORLD RECORD படைத்துள்ளார். 35 வது வட்டக் கழக அவைத் தலைவரும், அறங்காவலர் குழுத் தலைவருமான சோ.துரைபாண்டியன் ஏற்பாட்டின் பேரில், சாதனை படைத்த சிறுவனை நேரில் சென்று கழகத்தினர் பாராட்டி வாழ்த்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வேதாரண்யம் செ.யூசுப்
### நவம்பர் 4 (2013)




பள்ளிப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு வேதாரண்யம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

திருத்துறைப்பூண்டி வட்டக் கழக துணைச் செயலாளராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து வேதாரண்யம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமை செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைக் கழக பேச்சாளராகவும் திறம்பட பணியாற்றியவர்.


இரண்டு முறை நாகை மாவட்ட ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகப் பணியாற்றி வேதாரண்யம் பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1964ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (SIPCOT) 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 75 கோடியே 81 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், "சிப்காட்" நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.செந்தில் ராஜ் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் (TNPL) 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 12 கோடியே 22 இலட்சத்து 24 ஆயிரத்து 500 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். உடன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் மு.சாய் குமார், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.11.2023) மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அயலக தொடர்பு குழு தலைவர் பெ. இராஜேந்திரன் எழுதிய "மந்திரக் கணங்கள்" நூலினை வெளியிட, தமிழறிஞர்கள் பெற்றுக் கொண்டனர். முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் இவ்வேளையில் 2004 ஆம் ஆண்டு அயலக எழுத்தாளர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்புடன் வரவேற்று அங்கீகாரத்தை கொடுத்த தருணங்களையும், மலேசிய மக்களுக்கு செய்துள்ள மகத்தான தமிழ்ப் பணிகள் குறித்தும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி மற்றும் டி.கே.எஸ். இளங்கோவன், மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (2.11.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் (ம) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் சென்னை தீவுத்திடல் மைதானத்தில் ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்டின் இந்திய பந்தய விழாவை நடத்துவதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.15 கோடி நிதியை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# உடன்பிறப்பே... 30

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த மா.பா.சாரதி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## மா.பா.சாரதி : வேலூர் கழகத்தின் சாரதி!



ஓவியம் : ரவி பேலட்

2006-ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது, முத்தமிழறிஞர் கலைஞர் கழக வேட்பாளர்களையும், கூட்டணிக் கட்சி வேட்பாளர்களையும் ஆதரித்துப் பிரச்சாரப் பயணம் செய்தார். தேர்தல் நேரங்களில் வழக்கம்போல அவர் சூறாவளிப் பயணம் கிளம்பினால், எந்த ஊரில், எப்போது இருப்பார் என்பது அவராலேயே முடிவு செய்ய முடியாதது.

தலைவரைச் சந்திக்கும் உற்சாகத்தால், அவரது காரை நகரமுடியாத நிலைக்குக் கொண்டு செல்வார்கள், தொண்டர்கள். அன்றும் அப்படியான நிலைமைதான். வேலூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்துக்கு அவர் வந்து சேர்ந்தபோது மணி இரவு 9.55. அடுத்த 5 நிமிடங்களில் கூட்டத்தை முடிக்கவேண்டும் என்கிறபோது, அவர் பேசமாட்டார் என தொண்டர்கள் நினைத்திருந்த நேரத்தில், ஒலிவாங்கியை வாங்கியவர், **“என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே...” என உயிர்நாதத்தை முழங்கிவிட்டு, “இன்று வேலூர் கோட்டையில்... நாளை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில்”** என ஒரு வரியில், 2 நிமிடங்களில் முழங்கிவிட்டு, உணர்ச்சிப் பெருக்கை உசுப்பினார்.

அது உணர்ச்சிப் பெருக்கை உசுப்பும் பேச்சல்ல, உரிமையைப் பெருக்கும் நோக்கம் கொண்டது என கலைஞர் அறிவார். ஆம், கலைஞர் பேசிய அந்த இடத்தில் இருந்துதான் கழகத்தின் விதை ஊன்றப்பட்டது. சென்னையில், பவழக்காரத் தெருவில் கூடும் முன்னரே, தி.மு.க.வைத் தொடங்குவதற்கான நோக்கம் குறித்து, 1949-ஆம் ஆண்டில் வேலூர் கோட்டை மைதானத்தில்தான் விளக்கக் கூட்டம் நடத்தினார் பேரறிஞர் அண்ணா. அன்று, வேலூர் கோட்டையைக் கழகத்தின் கோட்டையாக உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவர்தான் மா.பா.சாரதி.

### 15 பேரில் ஒருவர்

அன்றைய வடஆற்காடு மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், கழகத்தின் வட ஆற்காடு மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர். 1957-ஆம் ஆண்டில் கழகம் முதன்முதலில் தேர்தலில் போட்டியிட்டு, 15 பேர் வெற்றிவாகை சூடி, சட்டமன்றத்தில் நுழைந்த நிகழ்வை கழகத்தின் வரலாறு அறிந்தோர் அறிவர். அதில் பெரும்பான்மை உறுப்பினர்கள் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே. அவர்களில் வேலூரில் வெற்றி கண்ட மா.பா.சாரதியும் ஒருவர்.

1919-ஆம் ஆண்டில் பிறந்தவர் மா.பா.சாரதி. முழுப்பெயர் பார்த்தசாரதி. பின்னாட்களில் மா.பா.சாரதியாக நிலைக்கப்பெற்றது. அவரது அரசியல் வாழ்க்கையின் தொடக்கக் காலங்கள் இந்திய தேசிய காங்கிரஸ் செயல்பாடுகளாக இருந்தன. சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற காலம் என்பதால், எல்லா இளைஞர்களையும் போல அதில் ஈர்க்கப்பட்டு, காங்கிரஸ் உறுப்பினரானார். 1940-ஆம் ஆண்டு அவர் காங்கிரஸில் செயல்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன.

அரசியல் சமூக மாற்றத்தில் நாட்டம் கொண்ட அவர், திராவிட இயக்கக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, 1945-ஆம் ஆண்டிலிருந்து திராவிடர் கழகத்தில் செயல்படலானார். பின்னர் கழகம் தொடங்கப்பட்ட போது, அண்ணாவின் வழிகாட்டலில் தன்னையும் இணைத்துக் கொண்டு கழக உறுப்பினராக களச் செயல்பாடுகளில் ஈடுபடுத்திக் கொண்டார்.

### அரசியல் ஆசாபாசம் இல்லாதவர்

கழகம், பொதுத் தேர்தல்களில் அரசியல் பயிற்சி பெறுவதற்கு முன்பே நகர்மன்றத் தேர்தல்களில் நுழைந்தது. அதில் முன்னோடியானவர் மா.பா.சாரதி. 1952-ஆம் ஆண்டில் வேலூர் நகராட்சி உறுப்பினராகவும் தேர்வு பெற்று மக்கள் பணியாற்றியவர் சாரதி. கழகத்தின் மாநாடுகள், போராட்டங்கள், சிறை அனுபவங்கள் என எல்லாவற்றிலும் கழகத்தின் வேலூர் படையணியின் சிப்பாய்களில் சிப்பாயாக நின்ற தளபதி அவர். அந்த நம்பிக்கையால்தான் மக்கள் அவரை, 1957-ஆம் ஆண்டில் சட்டமன்றத்துக்கு அனுப்பினர். அந்த ஐந்து ஆண்டுகளில் சட்டமன்றத்தில் கழக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அரசினை செயல்படத் தூண்டியவர்கள் என்றால், அதில் அதிக அழுத்தம் கொடுத்தவராக மா.பா.சாரதி இருந்தார்.

1962-ஆம் ஆண்டு தேர்தலின்போது வேலூரில் போட்டியிட்ட மா.பா.சாரதிக்காக பிப்ரவரி 2 -ஆம் தேதி நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய அண்ணா, “மா.பா.சாரதி, அடக்கமுள்ளவர்” எனச் சான்றளித்தார். மேலும் அவர், “தி.மு. கழகச் சார்பில் சட்டமன்றத் தேர்தலுக்குப் போட்டியிடும் நண்பர் மா.பா.சாரதி அவர்கள், போலீசு நிலையத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்துவதில்லை, அலுவலகங்களில் அபாயத்தை ஏற்படுத்துவதில்லை, மக்களிடத்தில் பீதியைக் கிளப்புவதில்லை, அடக்கமான சுபாவமும் எளிய தோற்றமும், யாரையும் வீணாகப் பகைத்துக் கொள்ளாத தன்மையும், நல்ல வியாபாரம் செய்ததால் ஏற்பட்ட பொறையுடைமையும் கொண்டவர்.

**அரசியல் ஆசாபாசங்களில் ஈடுபாடு கொள்ளாமல், கொண்ட கொள்கையைக் கைவிடாமல் தொடர்ந்து அவர் பணியாற்றுவது பெருமைக்குரியது. அவர், சட்டமன்றம் செல்வதால், நாட்டுக்கும் நன்மை – நம் கொள்கைக்கும் வலிவு!**

நண்பர் சாரதி, நீங்கள் சொல்வதைக் கேட்டு உங்களுக்காக அவற்றை சட்டமன்றத்தில் எடுத்துக் கூறி வாதாடுபவர். சென்ற ஐந்து ஆண்டுகளின் சட்டசபை நிகழ்ச்சிப் புத்தகத்தை நீங்கள் படித்துப் பார்த்தால், சாரதி அவர்கள் எத்தனை கேள்விகள் கேட்டார்-எத்தனை குறுக்குக் கேள்விகள் போட்டார்- என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நண்பர் சாரதி அவர்கள் 30 ஆண்டுகளாக ஒரே கொள்கையில் பற்று கொண்டிருக்கிறார். அரசியல் ஆசாபாசங்களில் ஈடுபாடு கொள்ளாமல், கொண்ட கொள்கையைக் கைவிடாமல் தொடர்ந்து அவர் பணியாற்றுவது பெருமைக்குரியது. அவர், சட்டமன்றம் செல்வதால், நாட்டுக்கும் நன்மை-நம் கொள்கைக்கும் வலிவு!

சட்டமன்றம் செல்வதற்கு வேண்டிய எல்லா தகுதிகளும் சாரதிக்கு இருக்கின்றன. இதை அறிந்துதான், சென்றமுறை அவரை சட்டமன்றத்திற்கு அனுப்பினீர்கள். இந்த முறையும் அனுப்புவீர்கள் என்ற திடமான நம்பிக்கை உங்களுக்கு இருப்பது போலவே எனக்கும் இருக்கிறது” என மக்களிடம் வேண்டுகோள் வைத்தார். ஆனால், அண்ணா எச்சரித்தது போல, எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றிபெற்றது, வேலூருக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்கும் கேடாகத்தான் அமைந்தது.

### வேலூர் வழித்தோன்றல்களை உருவாக்கியவர்

சட்டமன்றத் தேர்தலில் தோல்வி என்றாலும், வேலூர் மக்களின் அன்பு, சாரதியை 1964-ஆம் ஆண்டில் நகர்மன்றத் தலைவராகத் தேர்வு செய்தது. அவர் பொறுப்பில் இருந்தபோதுதான் வேலூர் கோட்டை அருகில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலை திறக்கப்பட்டது. அண்ணா தலைமையில் நடந்த அந்த விழாவுக்கு, அப்போதைய எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதன் பின்னர் கழகம் ஆட்சி அமைத்த 1967-ஆம் ஆண்டில் வேலூர் சட்டமன்ற உறுப்பினராக அவைக்குச் சென்றார் சாரதி. 1971-ஆம் ஆண்டிலும் மா.பா.சாரதி உதயசூரியன் சின்னத்தை அங்கு உதிக்க வைத்தார்.

இப்படி வேலூர் மண்டலத்தை, கழகத்தின் கோட்டையாகக் கட்டி எழுப்பியவர் சாரதி. தனக்கு அடுத்தும் வேலூரில் கழகமே வெற்றிக்கொடி நாட்ட வேண்டும் என பல இளைஞர்களுக்கு அரசியல் பயிற்சியையும், கொள்கைத் திறனையும் ஊட்டி வளர்த்த முன்னோடியாகத் திகழ்ந்தவர். அவரால் வளர்க்கப்பட்டவர்களில் ஒருவர்தான் கழகத்தின் தற்போதைய பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள்.

### அங்குசத்துக்கு அடங்கிய யானை

வேலூர் நகர் மன்றத்தில் 20 ஆண்டு காலம் உறுப்பினராகவும், மூன்று முறை நகராட்சித் தலைவராகவும் இருந்தார். தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவர் என்றும் மக்கள் மத்தியில் மா.பா.சாரதிக்குப் பெயர் இருந்தது. வேலூர் தொகுதியை கழகம் வெல்லும், அல்லது கழகத்தின் கூட்டணி வேட்பாளர் வெல்வார்கள் என்கிற நிலையை உருவாக்கிய முன்னோடியாகத் திகழ்ந்த மா.பா.சாரதி 1976-ஆம் ஆண்டு மிசா காலத்தில் மறைந்தார்.

‘பெயரால், புகழால், வல்லமையால், செல்வாக்கால், உருவத்தால் யானையென அவர் இருந்தாலும், கழகத்தின் கட்டளையெனும் அங்குசத்துக்கு அடங்கியன்றோ பணி குவித்தார்’ என கலைஞர் புகழ்மாலை சூட்டினார். வேலூரில் கழகக் கொடி உயரே பறப்பதற்குப் பின்னால், இந்தப் புகழ்மாலையை நினைவுக்குக் கொண்டு வருவதே உடன்பிறப்பாகும் சிறப்பு.

...துடிக்கும்

## கலைஞரைக் கொண்டாடும் சென்னைப் பல்கலை!




கலைஞர் நூற்றாண்டைக் கொண்டாடுவதில் அறிவுச் சமூகத்தின் பங்களிப்பு வியப்பளிக்கும் வகையில் அமைந்துள்ளது. சமூகச் செயற்பாட்டாளர்களும், கல்வியாளர்களும் கலைஞரின் சிந்தனைகளை, தமிழ்நாட்டுக்கு அவர் அளித்துள்ள அளப்பரிய பங்களிப்பை மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் கொண்டு சேர்த்து வருகின்றனர்.

அந்த வகையில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழித் துறை, ‘முத்தமிழறிஞர் கலைஞர்-100’ என்கிற தலைப்பின் கீழ், வாரம்தோறும் சிறப்பு உரையரங்கினை 10 வாரங்களுக்குத் தொடர்ந்து நடத்த உள்ளது. தமிழ்மொழித்துறை தலைவர் முன்னெடுப்பில் நடக்க உள்ள இந்த நிகழ்வுகளில், நவம்பர் 6-ஆம் தேதி, ‘கலைஞரும் தமிழும்’ என்கிற பொருளில் தமிழ்நாடு மாநிலத் திட்டகுழு முன்னாள் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன் உரை நிகழ்த்த உள்ளார்.

சென்னை மெரினா வளாகத்தில் அமைந்துள்ள பவள விழா கலையரங்கில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

## :ப்ளாஷ்பேக்





கதிரவன்

### கழக மேடையில் குடும்பம்!

என் அப்பா கொ.மு.கணேசன், நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, மல்லசமுத்திரம் பேரூர்க் கழகத்தின் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாவட்ட முன்னாள் துணை அமைப்பாளராக இருந்தவர். 1999-ஆம் ஆண்டு ஜூன் மாதம் நாமக்கல்லில் நடைபெற்ற தலைவரின் 76-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில், மூன்று மாதக் கைக்குழந்தைகளாக இருந்த இரட்டையர்களான எனக்கும் என் உடன்பிறப்புக்கும் கதிரவன், ஆதவன் என்று பெயர் சூட்டினார், தலைவர் கலைஞர். மேடையில், என் அத்தையின் கையில் நானும், என் அம்மாவின் கையில் என் சகோதரனும், என் அப்பா, அக்கா என குடும்பத்துடன் தலைவர் அருகில் இருந்தோம் என்பதைப் பார்க்கும்போது இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் மனம் பூரிப்படைகின்றது.

**-க.கதிரவன், மல்லசமுத்திரம், நாமக்கல் மேற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஆதாரமற்ற செய்திகள்!

**1955-ஆம் ஆண்டிலேயே தி.மு. கழகத்தின் மீது தீய எண்ணத்துடன் போலிச் செய்திகள் பரப்பப்பட்டன. கழகத் தின் செய்திகளையும், கழகப் பேச்சா ளர்களின் பேச்சுகளையும் உள்ளது உள்ளவாறு வெளிப்படுத்தாமல், அவற்றை மறைத்தும் மாற்றியும், திரித்தும், புனைந்தும் சில ஏடுகள் செய்திகள் வெளியிட்டன. அவற்றைக் கண்டித்தும், ‘அந்த ஏடுகளுக்கு கழகத் தோழர்களும், பேச்சாளர்களும் பேட்டி, செய்திகள் கொடுக்க வேண்டாம்’ என்றும் கழகத்தின் சார்பில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 290




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131